கர்த்தர் ராஜரிகம் பண்ணுகிறார்!

இயேசு
உங்களை
நேசிக்கிறார்

நவம்பர், 2026



இரங்குகிற தேவனாலே ஆகும்

NOVEMBER 2026

சிறப்புச் செய்தி




இரங்குகிற தேவனாலே ஆகும்

"ஆகையால் விரும்புகிறவனாலும் அல்ல, ஓடுகிறவனாலும் அல்ல, இரங்குகிற தேவனாலேயாம்." – ரோமர் 9:16

என் அன்பு தேவனுடைய பிள்ளைகளே, கிறிஸ்து, "நீங்கள் காண்கிற இந்த நாட்களை ஆபிரகாம் முதலானோர் காண வாஞ்சையாய் இருந்தார்கள்" என்று சொன்னார். அநேகர் காண வேண்டியிருந்த நாட்களை 12 அப்போஸ்தலர்கள் காணுவதற்குக் கர்த்தர் கிருபை செய்தார். கிறிஸ்துவை நேரே பார்ப்பது எவ்வளவு பெரிய பாக்கியம்! அவரோடு வாழ்வது எவ்வளவு பெரிய பாக்கியம்! கிறிஸ்து 12 சீடர்களோடு உலாவுவது எவ்வளவு பெரிய சந்தோஷமாயிருக்கும். தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார். அப்படிப்பட்ட பாக்கியத்தை 12 அப்போஸ்தலர்கள் பெற்றிருந்தார்கள். இதைவிட பெரிய பாக்கியம் பெற்றவர்கள் யோசேப்பும் மரியாளும்! இந்தப் பாக்கியத்தை அநேகர் விரும்புகிறார்கள். அதற்காகவே ஓடுகிறார்கள். ஆனால் இரங்குகிற தேவனாலேயேதான் இந்த நன்மைகள் எல்லாம் கிடைக்கிறது.

நீங்கள் உங்கள் பிள்ளைகளுடைய பள்ளியில் Sports Day க்குப் போயிருப்பீர்கள். உங்கள் மகன் Running ல் ஓடுகிறான். நீங்கள் அங்கு அமைந்துள்ள Gallery யில் அமர்ந்து பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் மகன் முதலாவது ஓடி வர வேண்டும் என்று எண்ணுகிறீர்கள். அவனும் நன்றாக ஓடிக் கொண்டிருக்கிறான். திடீரென்று Shoe Lace தட்டிக் கீழே விழுகிறான். சரியாக ஓடாத ஒரு பையன் முன்பாகச் சென்று பரிசைப் பெற்றுக் கொள்கிறான் என்று வைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் அதைக் குறித்து என்ன சொல்லுவீர்கள். என்னஆனது, கர்த்தர் நமக்கு ஏன் உதவி செய்யவில்லை என்பீர்கள். கர்த்தரை அறியாதவர்கள் இவனுக்குக் கெட்ட காலம். அதினால்தான் Shoe



சகோதரன் J. ஆலன்பால்

Lace கழன்று கீழே விழுந்து விட்டான் என்பார்கள். இனி அடுத்த வருடம்தான் இந்தப் பாக்கியம் அவனுக்குக் கிடைக்க வாய்ப்புண்டு.

என் அன்பு தேவனுடைய பிள்ளைகளே, அநேகர் வாஞ்சித்தார்கள். அநேகர் ஓடினார்கள். ஆனால் இரங்குகிற தேவன் யாருக்கு இரங்குகிறாரோ, அவர்களுக்குத்தான் இரங்குவார்.

கிறிஸ்துவினுடைய சீஷர்களில் இரண்டு பேர்களின் தாய் அவரிடம்



இவ்வாறு கேட்டார்கள்: ஆண்டவரே, நான் ஒரு விண்ணப்பத்தை உம்மிடம் கேட்கிறேன். நீர் ராஜ்யத்தில் வரும்போது, உமக்கு வலது புறத்தில் ஒருவனும், இடது பக்கத்தில் ஒருவனும் அமருவதற்கு அருள் செய்ய வேண்டும் (மத்தேயு 20:21) என்று வேண்டிக் கொண்டார்கள். இந்தத் தாயார் இதை எவ்வளவு நாள் யோசித்துக் கொண்டிருந்தார்கள் தெரியவில்லை. அவர் பிரசங்கம் செய்யும் பொழுதெல்லாம் பார்த்துக் கொண்டேயிருந்திருப்பார்கள். இவர்தானே கிறிஸ்து. இவர் தானே மேசியா. இவருக்குச் சிங்காசனம்தானே இருக்கப் போகிறது. இவர் தானே ராஜா. இவருடைய வலது பக்கத்தில் ஒரு பையனும், இடது பக்கத்தில் ஒரு பையனும் இருக்கும்படி வேண்டிக் கொண்டார்கள்.

அதற்கு கிறிஸ்து நீங்கள் சொல்லுவது சரிதான். தேவன் யாருக்கு இரங்க வேண்டும் என்று நியமித்து வைத்திருக்கிறாரோ, அவர்களுக்குத்தான் இரங்குவார். பிதாவின் சித்தம் எதுவோ, அதிலே குமாரனுடைய சித்தத்தில் அமைந்து காத்திருப்பதுதான் வாழ்க்கை! யாருக்குப் பிதா இரங்கத் தீர்மானித்திருக்கிறாரோ அவர்களுக்குத்தான்.

நீங்கள் உபவாசித்து ஜெபிப்பதினால்தான் பெரிய ஆளாக மாறுகிறீர்கள் என்கிற எண்ணம் உங்களுக்கு வேண்டாம்.

உன் நீதியினிமித்தம் இந்தத் தேசத்திற்கு நான் உன்னைக் கொண்டு செல்லவில்லை. ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபுக்கு நான் ஆணையிட்டதினால் நான் உன்னைக் கொண்டு செல்கிறேன். ஆகவே நாம் நம்முடைய நீதியை நம்பாமல் கர்த்தர் கொடுத்த வாக்குத்தத்தத்தைப் பிடித்துக் கொள்ளுவோம். கர்த்தர் சொன்னபடி நடந்தே ஆகும். "கர்த்தர் சொல்ல ஆகும்; அவர் கட்டளையிட நிற்கும்". கர்த்தரையே பற்றிக் கொள்வோம்.

தேவனுடைய இரகசியச் செயல் கூடாரத்தின் மேல் இருக்கும்போது,(யோபு 29:4) தேவன் சர்வவல்லவராய்க் கூடாரத்திற்குள் உலாவிக்கொண்டு இருக்கிறார்.

என் அன்பு தேவனுடைய பிள்ளைகளே, தேவன் நம்மீது இரங்கும்போது, கரம் நீட்டுகிறார். ஆசீர்வாதம் கூறுகிறார்.

"அவர் இஸ்ரவேல் புத்திரருடைய அதிபதிகள்மேல் தம்முடைய கையை நீட்டவில்லை; அவர்கள் தேவனைத் தரிசித்து, பின்பு புசித்துக் குடித்தார்கள்."
-யாத். 24:11



இஸ்ரவேல் புத்திரருடைய அதிபதிகள்மேல் கர்த்தர் தம் கையை நீட்டவில்லை. இந்த அதிபதிகளுக்கு வேலை எப்பொழுதும் இருந்துகொண்டே இருக்கும். கர்த்தரைத் தேடுவதற்கு நேரமே இல்லாமல் ஓடிக்கொண்டிருப் பார்கள். ஒருசிலருக்குத் தாங்கள் வாழுகிற வாழ்க்கையைக் காட்டிலும் வேலை அதிகமாய்ப் போய்விடுகிறது.

நமக்கு வேலை செய்ய வேண்டும். வாழ வேண்டும். பிழைக்க வேண்டும், ஆனால் வேலை அதற்கு மேலாக உங்கள் வாழ்க்கையில் குறுக்கிடக் கூடாது.

கடந்த 2 மாதங்களுக்கு மேலாக ஆவிக்குள்ளானதைப்போல ஏராளமான தரிசனங்களைப் பார்த்து, அமர்ந்து கொண்டிருக்கிறேன். ஒருநாளைக்கு சில நேரங்களில் 2மணி நேரம் அல்லது 3 அல்லது 4 மணி நேரம் மாத்திரம் தூங்கிக் கொண்டு ஓடிக்கொண்டிருக்கிறேன். ஒருவர் ஒரு நாளைக்கு 8 மணி நேரம் தூங்க வேண்டும். அல்லது 6 மணி நேரமாவது தூங்க வேண்டும்.

கர்த்தருடைய சமுகத்திலே இருக்கிறேன். மோசே இதேபோலத்தான் இருக்கிறார். தேவன் அவர் மேல் கை நீட்ட முடிகிறது. ஆனால் இந்த அதிபதிகள் ஆண்டவரோடு அதிகளவு நெருங்கவில்லை. ஆகவே கை நீட்ட வில்லை. ஆனால் தரிசிக்கட்டும், புசிக்கட்டும், பானம் பண்ணட்டும் என்றார்.

நம்முடைய ஊர்களில், கிராமங்களில் ஆலயத்தில் அசனச் சாப்பாடு போடுவார்கள். ஆலயம் ஆரம்பித்த நாட்களைக் கருத்தில் கொண்டு மூன்று நாட்கள் எல்லோருக்கும் இலவசமாக உணவளிப்பார்கள். எல்லாருக்கும் சாதம் மற்றும் மட்டன் குழம்பு கொடுப்பார்கள். எத்தனை முறை புசித்தாலும் திகட்டாது. சாப்பிட்டுவிட்டு, வீட்டில் 5 நபர்கள் இருக்கிறார்கள், அவர்களுக்குப் பார்சல் வேண்டும் என்றால் அதையும் கொடுப்பார்கள். அந்தச் சாப்பாட்டில் ஒரு ஆசீர்வாதம் இருக்கும். ஆலயத்தின் ஆகாரம்!

தேவன் ஆலயத்தில் வாசம் பண்ணுவதால் ஆகாரத்தை ஆசீர்வதித்திருக்கிறார். வீட்டில் எப்படித்தான் குழம்பு வைத்தாலும் இந்த ருசி வருவதில்லை என்பார்கள். ஆனால் அதில் தேவனுடைய ஆசீர்வாதம் தங்கியிருக்கிறது.

தேவன் ஆகாரத்தில் கை வைக்கிறார். போஜனத்தில் கை வைக்கிறார். அவர் உன் அப்பத்தையும் தண்ணீரையும் ஆசீர்வதிப்பார்.

"அவர்கள் தேவனைத் தரிசித்து, பின்பு புசித்துக் குடித்தார்கள்."

– யாத். 24:11

அவர்கள் தேவனைத் தரிசித்தார்கள் என்று எழுதப்பட்டுள்ளது. மோசே ஆரோனுடைய வீட்டார் தேவனைத் தரிசித்தார்கள். ஒரு மனிதனுக்குள் அந்நிய ஜீவன் தங்கியிருக்குமானால், அந்த மனிதன் தேவனைத் தரிசிக்க வேண்டும் என்று கேட்டால் தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை என்கிற சட்டம் பாய்ந்து, அவனுடைய கண்களை மூடுகிறது. அந்நிய ஜீவன் என்றால் மனுஷ ஜீவன் அல்லாத வேறொரு ஜீவன்தான் அந்நிய ஜீவன். அப்படிப்பட்ட ஜீவன் உள்ளே தங்கக் கூடாது. ஆகவே தரிசனம் கொடுத்தால் ஒரு சில வினாடிகள்தான். பின்பு மறைந்து விடுவார்.

எம்மாவூர் சீஷர்களுக்கு முன்பாக அப்பத்தைப் பிட்டார். அவர்கள் பார்த்தவுடனே மறைந்து போனார்.



ஆனால் இங்கு தேவனைத் தரிசித்தார்கள். புசித்தார்கள். பானம் பண்ணினார்கள். இந்த அதிபதிகள் எவ்வளவு பெரிய பாக்கியத்தைப் பெற்றிருந்தார்கள். தேவன் மோசேக்கு இரங்கினதைப்போல இரங்க வேண்டும். ஆகவே அவருடைய கையை அவர்கள்மேல் நீட்டவில்லை என்று எழுதியிருக்கிறது.


ஆண்டவருடைய கை இரங்கி நம்மீது நீட்டப்பட வேண்டுமென்றால், நாம் சில காரியங்களைச் செய்ய வேண்டியது இருக்கிறது. நம்முடைய வேலைப் பளு தேவனைத் தேடுகிற உணர்வை எடுத்துவிடக் கூடாது.

அதிகாலையில் எழுந்து, யாரிடமும் பேசாமல் குளித்துத் தயாராகி, எடுத்துக்காட்டாக, "நான் பாடின ஆகமங்கள் புகழ் வேதா நமோ, நமோ" பாட்டைக் கேட்கலாம். அப்பொழுது அதில் வருகிற இசை மற்றும் பாடல் வரிகளைக் கேட்கும்போது, உங்களைப் பரவசமாக்கும்.

ஆனால் நீங்கள் வேலைக்குச் சென்று மாலையில் வேலை முடிந்து, சோர்வோடு வீட்டிற்கு வரும்போது அந்தப் பாடலைக் கேட்டால் 40 சதவீதம் மாத்திரம் தான் உங்கள் இருதயத்திற்குள் போகும். பாட்டைக் கேட்டுக் கொண்டே வேறே எதையோ யோசித்துக் கொண்டு இருப்பீர்கள். "அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள்." (நீதி. 8:17) என்று வேதம் சொல்லுகிறது.

ஆண்டவருடைய சமுகத்திலே அவரை நீங்கள் தேடும்போது அவர் கை

நீட்டுவார். உங்களில் அநேகர் அவருக்கு ஊழியம் செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்கள். உலகத்திலே நீங்கள் shine பண்ண வேண்டும் என்று விரும்புகிறீர்கள். அதற்காக அநேகர் ஓடுகிறீர்கள். ஆனால் தேவன் இரங்கினால்தான் உங்களை விளக்குத் தண்டின்மேல் வைப்பார். விளக்கைக் கொளுத்தின தேவன் தாமே விளக்குத் தண்டின்மேல் வைப்பார். ஆண்டவர் உங்கள் தண்ணீரையும், ஆகாரத்தையும் ஆசீர்வதித்தால் போதாது. நீங்கள் அவரைத் தரிசித்தால் போதாது. அவருடைய கை உங்கள்மேல் பட வேண்டும். அன்பின் ஆண்டவருடைய கரம் உங்கள்மேல் வர வேண்டும்.



ஒவ்வொரு நாளும் அதிகாலையில் அவரைத் தேடுங்கள். அப்பொழுது அவருடைய கரத்தை வைத்து உங்களை ஆசீர்வதிப்பார். எப்பொழுது வந்து ஆசீர்வதிப்பார் என்பது உங்களுக்குத் தெரியாது. எந்நேரத்திலும் கர்த்தர் தமது கரத்தை நீட்டி ஆசீர்வதிப்பார்.

இரண்டு விதமான அர்ப்பணிப்போடு நாம் ஆண்டவரிடம் வர வேண்டும் என்று வேதம் சொல்லுகிறது.

"ஜனங்களுக்குள்ளே தங்களை மனப்பூர்வமாய் ஒப்புக்கொடுத்த இஸ்ரவேலின் அதிபதிகளை என் இருதயம் நாடுகிறது; கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள்."– நியாயா. 5:9

இதில் தெபொராளும், அபினோகாமின் குமாரன் பாராக்கும் பாடின பாட்டைக் குறித்து எழுதப்பட்டுள்ளது. இஸ்ரவேலின் அதிபதிகளில் மனப்பூர்வமாய்த் தங்களை ஒப்புக் கொடுத்தவர்கள் இருக்கிறார்கள். கர்த்தருக்காக வாழுவோம் என மனப்பூர்வமாய்த் ஒப்புக்கொடுத்தவர்கள் இருக்கிறார்கள். அநேகர் முழுநேர ஊழியத்திற்கு வந்து விடுகிறார்கள். நம்முடைய ஊழியத்திலே அநேகர் staff ஆக இணைந்து விடுகிறார்கள். இவர்கள் வேறொரு இடத்திற்குச் சென்று வேலை செய்தால் அதிக சம்பளம் கிடைக்கலாம். ஒருவேளை, ஏராளமாகச் சம்பாதிக்கலாம். ஆனால் இங்கு அந்த அளவுக்குச் சம்பளம் கொடுக்க முடியாமல் இருக்கலாம். IT Park Company க்குச் சென்று வேலை பார்த்தால் இதை விட ஐந்து மடங்கு சம்பளம் கிடைக்கலாம். இவர்கள் ஒப்புக்கொடுத்துதான் வேலைக்கு வருகிறார்கள். ஆனால் எல்லாரும் மனப்பூர்வமாய் ஒப்புக் கொடுக்கிறார்களா என்பது கேள்வியாகத்தான் உள்ளது. அர்ப்பணிப்பு என்பது சிலர் 100%, சிலர் 90%, சிலர் 70%, சிலர் 50% என்றும் கூட இருக்கலாம்.

இதில் தெபொராள் தான் தீர்க்கதரிசியாக உயர்ந்ததைத் தேட வில்லை. எனக்கும், பாராக்குக்கும் அடுத்தபடி மனப்பூர்வமாய் ஒப்புக் கொடுத்த அதிபதிகள் இருந்தார்களானால் அவர்களைக் குழுவாக அமைத்து, இஸ்ரவேலை

நடத்தலாம் என்று எண்ணுகிறார்கள்.

மனப்பூர்வமாய் ஒப்புக் கொடுத்தவர் வேண்டும். நூற்றுக்கு நூறு என்றால் ஒப்புக்கொடுத்தல் என்று அர்த்தம். 7 முறை ஒப்புக்கொடுப்பதை மனப்பூர்வம் என்று சொல்லலாம். அப்படியானால் நூற்றுக்கு எழுநூறு முறை ஒப்புக்கொடுத்தல் மனப்பூர்வமாய் ஒப்புக்கொடுத்தல் ஆகும்.

நூற்றுக்கு 700 மதிப்பெண்கள் எப்படிப் பெறுவது? ஒரு டம்ளரில் உள்ள காபியின் அளவு 250 மி.லி. இருக்கும். பெரிய டம்ளரில் உள்ள காபியின் அளவு 300 மி.லி. இருக்கும். நீங்கள் காபி கேட்ட உடனே உங்களுக்கு 300 மி.லி. உள்ள பெரிய டம்ளரில் காபி கொடுத்தால் 100 சதவீதம் என்று அர்த்தம். coffee day shop என்பதைப் போன்ற இடத்திற்குச் சென்றால், சிறிய டம்ளரில் காபி வேண்டுமா? அல்லது பெரிய டம்ளரில் வேண்டுமா? அல்லது மிகவும் பெரிய டம்ளரில் வேண்டுமா? என்று கேட்பார்கள். பெரிய டம்ளரில் 600 மி.லி. அதாவது 200 சதவீதம், இரண்டு மடங்கு காபி இருக்கும். இது போதாது, இன்னும் எனக்கு வேண்டும் என்று கேட்டால் வீட்டிற்குக் கொண்டு செல்லுங்கள் என ஒரு டப்பாவில் கொடுப்பார்கள். அதில் 1500 மி.லி. இருக்கும். வீட்டார் எல்லாரும் காபி குடிக்கலாம். 300 மி.லி. நீங்கள் குடிக்கிற காபியின் அளவு. 1500 மி.லி. என்றால் 5 மடங்கு அல்லவா! இதைப் போல உங்களுக்கு 200 சதவீத மார்க் வேண்டும். அதுதான் மனப்பூர்வம்.

பேதுரு இயேசுமகாராஜாவிடம் ஆண்டவரே, ''நான் சாவிலும், காவலிலும் உம்மைப் பின்தொடர்வேன்"



என்றார். அதுதான் பூரணமான ஒரு அர்ப்பணிப்பு ஆகும். மனப்பூர்வமான வார்த்தை! உம்முடைய பணியைச் செய்ய மனப்பூர்வமாய் வருகிறேன் கர்த்தாவே! என்று சொல்ல வேண்டும்.

ஆலயத்திற்கு வருவதில் மனப்பூர்வம் இருக்க வேண்டும். என்னையே அர்ப்பணிக்கிறேன் என்று சொல்லுகிற அதிபதிகள் வேண்டும், தலைவர்கள் வேண்டும்.

எல்லோரும் தலைவர்கள் அல்ல. நம்முடைய கையில் உள்ள 5 விரலில் எது தலைமையான விரல் என்று சொல்லுங்கள். பெருவிரல்தான். உங்களைக் கர்த்தர் உயர்த்தி வைத்திருக்கிறார் என்றால் நீங்கள் மனப்பூர்வமாய் ஒப்புக் கொடுத்தவர்களாய் இருக்க வேண்டும்.

உங்கள் கிறிஸ்துவுக்கு அடுத்தபடியாக வீட்டிற்குத் தலைவன் / தலைவியாய் நீங்கள் இருக்கிறீர்கள் அல்லவா! மனப்பூர்வமாய் உங்கள் குடும்பத்திற்கு உங்களை ஒப்புக் கொடுங்கள். எல்லாத் தடைகளையும் உடைத்து விடுங்கள். உங்களைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவங்களை வெறுத்துத் தள்ளுங்கள். சோம்பலைத் தூக்கி எறியுங்கள். கர்த்தருடைய பாதத்தைப் பற்றிக் கொள்ளுங்கள். இன்றிலிருந்து உங்கள் இருதயத்தைப் புதுபித்துக்

கொள்ளுங்கள். கர்த்தருடைய சித்தத்தை நான் செய்வேன் என்று தீர்மானம் எடுங்கள்.

"குமாரனைக் கனம்பண்ணாதவன் அவரை அனுப்பின பிதாவையும் கனம்பண்ணாதவனாயிருக்கிறான்."
– யோவான் 5:23

என் அன்பு தேவனுடைய பிள்ளைகளே, உங்கள்மேல் அன்பாய் இருந்து கொண்டு, உங்கள் பிள்ளைகளை அடித்து விரட்டினால் எப்படியிருக்கும்? நீங்கள் உங்கள் நண்பர்களிடம் அன்பாயிருக்கிறீர்கள். அவர்கள் பொங்கல், பிரியாணி செய்யும்போது உங்களுக்குக் கொடுத்து அனுப்புகிறார்கள். நீங்கள் போகும்போது உங்களை வரவேற்றுக்கொண்டு, உங்கள் பிள்ளைகளை அடித்து விரட்டினால், உங்கள் நண்பர்களிடம் நீங்கள், "இங்கே பாரு, என்னைக் கூட நீ இப்படி நடத்தலாம். என் பிள்ளையை அப்படி நடத்தாதே" என்று சொல்லுவீர்கள் அல்லவா!

குமாரனாகிய இயேசுவைக் குறித்து, தேவன் தமது பரிசுத்தப் பிள்ளையாகிய இயேசு கிறிஸ்துவை நம்மிடத்தில் அனுப்பினார். பிதாவைக் கனம் பண்ண வேண்டும் என்றால், அவர் அனுப்பினவராகிய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவைக் கனம் பண்ணினால் போதும், அவரைப் பற்றிக் கொண்டால் போதும்.

ஒரு குறிப்பிட்ட தொழிலதிபர் மரித்துப் போனார். அவருடைய வீடு முழுவதும் ஏலத்திற்கு வந்தது. அவர் தேசத்திலே நன்மதிப்புடையவராய் இருந்ததினால் ஏலம் எடுப்பதற்கு அநேகர் வந்திருந்தார்கள். ஏலம் ஆரம்பித்தது. முதலாவது ஒரு போட்டோவை ஏலமிட்டார்கள். அதன் பின்பு அநேகப் பொருட்கள் வரவிருக்கிறது. அந்தப் போட்டோவை யாரும் ஏலம் எடுக்கவில்லை. ஆனால் ஒரு நபர் மாத்திரம் அதை ஏலத்தில் எடுத்துக் கொண்டார். ஏலம் விடுபவர் ஏலம் முடிந்தது என்று கூறினார்.

வந்த மற்றவர்கள் ஏன் ஏலம் முடிந்தது என்று கேட்டார்கள்? அதற்கு அவர்: 'இந்தப் போட்டோவில் இருப்பது அந்தப் பெரிய தொழிலதிபரின் மகன். மகனுடைய போட்டோவை யார் ஏலம் எடுக்கிறார்களோ, அவர்களுக்கு எல்லாப் பொருட்களும் இலவசம்' என்று கூறினார். அந்தப் போட்டோவை ஏலம் எடுத்தவருக்கு எல்லாப் பொருட்களையும் அனுப்பிக் கொடுத்தார்கள்.

பிதாவைப் பொறுத்த வரை கிறிஸ்துவை நாம் கனம்பண்ணினால் போதும், உங்கள் வீட்டிற்கு எல்லாவற்றையும் பிதா அனுப்பி வைப்பார். ஆசீர்வாதம் வந்து சேரும்.

நாம் கிறிஸ்துவை விட்டுவிட்டு, பொருட்களையும் தங்கத்தையும் தேடிக் கொண்டு இருக்கக்கூடாது. ஏலம் விடுபவரைப்போல பிதா பார்த்துக் கொண்டேயிருக்கிறார். என்னுடைய குமாரனைக் கனம்பண்ணினால் போதும். நான் எல்லாவற்றையும் அவர்களுக்குக் கொடுத்துவிடுவேன் என்பார். குமாரனைக் கனம் பண்ணுகிறவன் பிதாவையும் கனம் பண்ணுகிறான். என்னைக் கனம் பண்ணுகிறவர்களை நானும் கனம்பண்ணுவேன். ஆகவே, தேவன் உங்களைக் கனம் பண்ணுகிற விதம் வித்தியாசமாய் இருக்கும். ஆமென்!



தெரிந்து கொள்வோமா!

கிவி(Kiwi)

சீன நெல்லிக்காய் என்று அழைக்கப்படும் கிவிப் பழம், அதன் பச்சை சதை மற்றும் தனித்துவமான சுவைக்குப் பெயர் பெற்ற ஒரு சிறிய ஊட்டச்சத்து நிறைந்த பழமாகும். கிவிப்பழத்தின் தாயகம் சீனாவாகும் . இதன் தாவரவியல் பெயர் ஆக்டினிடியா டெலிசியோசா (Actinidia deliciosa) என்பதாகும். நியூசிலாந்து இந்தப் பழத்தை வணிக ரீதியாக வளர்க்க தொடங்கியபோது, தங்களின் நாட்டுப் பறவையான 'கிவி' (Kiwi bird) போன்றே இந்தப் பழமும் பழுப்பு நிற முடிகளுடன் இருந்ததால் இதற்கும் கிவிப் பழம் எனப் பெயரிட்டனர்.

1. ஊட்டச்சத்து உண்மைகள் (Nutritional Facts)

வைட்டமின் சி : ஆரஞ்சு பழத்தை விட கிவிப் பழத்தில் அதிக வைட்டமின் 'சி ' உள்ளது. இது உடலின் நோய் எதிர்ப்பு சக்தியைப் பல மடங்கு அதிகரிக்கிறது.

பொட்டாசியம்: ஒரு நடுத்தர அளவிலான வாழைப்பழத்தில் இருப்பதை விட அதிக பொட்டாசியம் கிவிப் பழத்தில் நிறைந்துள்ளது.

கலோரி : 75 கிராம் கிவிப் பழத்தில் வெறும் 64 கலோரிகள் மட்டுமே உள்ளன. உடல் எடையைக் குறைக்க நினைப்பவர்களுக்கு இது ஒரு சிறந்த தேர்வாகும்.

நார்ச்சத்து : இதில் கரையக்கூடிய மற்றும் கரையாத நார்ச்சத்துக்கள் சம அளவில் (3-4 கிராம்) நிறைந்துள்ளதால் செரிமான ஆரோக்கியத்திற்கு மிகவும் நல்லது.



2. வியப்பூட்டும் உண்மைகள்

தோலையும் சாப்பிடலாம் : கிவிப் பழத்தின் வெளிப்புற பழுப்பு நிறத்தோலை உரிக்காமலும் சாப்பிடலாம். குறிப்பாக, தங்கக் கிவி (Golden Kiwi) ரகப் பழங்களைத் தோலுடன் சாப்பிடுவது மிகவும் எளிது.

இறைச்சியை மென்மையாக்க : கிவிப் பழத்தில் 'ஆக்டினிடின்' (Actinidin) என்ற என்சைம் உள்ளது. சமையலில் கடினமான இறைச்சிகளை (Meat) மென்மையாக்க (Tenderize) இதன் சாறு பயன்படுத்தப் படுகிறது.

ஆல் ஸ்டார் பழம் : ரட்ஜர்ஸ் பல்கலைக்கழக ஆய்வின்படி, உலகில் பொதுவாக உண்ணப்படும் 21 பழங்களில் கிவிப் பழமே மிக உயர்ந்த ஊட்டச்சத்து அடர்த்திக் கொண்ட பழமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

3. ஆரோக்கிய நன்மைகள் (Health Benefits)

ஆழ்ந்த தூக்கம் : தூக்கமின்மைப் பிரச்சனை உள்ளவர்கள் இரவில் கிவிப் பழம் சாப்பிட்டு வந்தால் தூக்கம் மேம்படும்.

இரத்த அழுத்தம் மற்றும் இதயம் : இது உடலில் இரத்தம் உறைவதைத் தடுத்து, இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்த உதவுகிறது.

கண் மற்றும் தோல் ஆரோக்கியம்: இதில் உள்ள வைட்டமின் 'ஏ' மற்றும் 'ஈ' காரணமாகக் கண் பார்வைத் திறனும், சருமப் பொலிவும் அதிகரிக்கின்றன.

■ இவை நாங்கள் சேகரித்து வெளியிட்ட தகவல்கள் மட்டுமே.

5 வருடப் படுத்தப் படுக்கையை மாற்றினார்!



நான் 5 வருடங்களாக உடல்நிலை சரியில்லாமல் படுத்த படுக்கையாக இருந்தேன். எனக்கு கை, கால் வராமல் இருந்தது. கண் பார்வை சரியாகத் தெரியவில்லை. மற்றும் BP பிரச்சனையும் இருந்தது. என்னால் சாப்பிடவோ நடக்கவோ மற்றும் எழுந்திருக்ககூட முடியாது. சாப்பாட்டை ஊட்டித்தான் விடுவார்கள். கை மற்றும் கால் நரம்பெல்லாம் வலித்தது. அப்பொழுது ஒரு முறை என்னுடைய மகன் ஆசீர்வாதம் டிவியின் உபவாசக் கூட்டத்திற்கு வந்து கலந்துகொண்டு, ஜெப எண்ணெயை வாங்கிக் கொண்டு வந்தான். என்னுடைய கை, கால், வாய் மற்றும் கண்ணில் பூசி ஜெபித்தான். சகோதரன் அன்றிரவு என் கனவில் வந்து, "என்னைத் தொட்டு எழுந்து உட்காரு; ஆலயத்திற்கு வா" என்று சொன்னார்கள். "நான் படுத்தப் படுக்கையாக இருக்கிறேன் எப்படி ஆலயத்திற்கு வருவேன். எனக்கு கை, கால் வேலை செய்யாமல் இருக்கிறதே" என்று கேட்டேன். அப்பொழுது சகோதரன், "நீ எழுந்து நடப்பாய்; உபவாசக் கூட்டத்திற்கு வந்து கலந்து கொள்வாய்" என்று கூறினார்கள். அடுத்த நாளே எனக்குக் கர்த்தர் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். இப்பொழுது நன்றாக நடக்க முடிகிறது. வீட்டில் எல்லா வேலையும் செய்ய முடிகிறது. இக்கூட்டத்திற்கு வரவும் கர்த்தர் கிருபை செய்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக. – சகோதரி ஜூலியஸ், எர்ணாவூர்.

உழியங்களில் கர்த்தர் செய்த கிரியைகள்!

GLORY TO GOD!

நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய்!

சென்னை உபவாசக் கூட்டம் 26.9.2026

வெளியே அமர்ந்திருந்த தேவப்பிள்ளைகள்

ஒவ்வொரு மாதமும் சென்னையில் நடைபெறுகிற ஆசீர்வாதம் டிவியின் உபவாசக் கூட்டத்தில் திரளான ஜனங்கள் கலந்து கொண்டு, ஆவி, ஆத்துமா, சரீரத்தில் விடுதலையையும் ஆசீர்வாதத்தையும் பெற்றுக் கொள்கிறார்கள்.

GLORY TO GOD!

நமது ஊழியங்களில் கர்த்தரின் கிரியைகள்!

கணவருக்கு 20 வருடக் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை! மஞ்சள் காமாலை & சுகர் வியாதி சுகமானது!



என்னுடைய கணவர் 20 வருடங்கள் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி இருந்தார். ஆசீர்வாதம் டிவியின் உபவாசக் கூட்டத்தில் கலந்து கொண்டு ஜெபித்து வந்தேன். கர்த்தர் இப்பொழுது பரிபூரண விடுதலையைக் கொடுத்திருக்கிறார். என்னுடைய கணவருக்கு மஞ்சள் காமாலை மற்றும் சுகர் அளவு 530 ஆக இருந்தது. ஆசீர்வாதம் டிவியின் உபவாசக் கூட்டத்தில் கலந்து கொண்டேன். சகோதரன் ஜெபித்தபோது "அநேக வியாதிகள் நீங்குகிறது" என்று சொன்னார்கள். இயேசப்பா சகோதரன் மூலமாக நீர் சொன்னதுபோல "என்னுடைய கணவருக்கு மஞ்சள் காமாலை மற்றும் சுகர் பிரச்சனை நீங்க வேண்டும். கணவருக்குச் சுகமானால் நான் சாட்சி சொல்லுவேன்" என்று பொருத்தனைப்பண்ணி ஜெபித்தேன். ஆசீர்வாதம் டிவியின் ஜெப உதவியைத் தொடர்பு கொண்டு ஜெபித்தேன். ஜெப எண்ணெயைத் தினமும் பயன்படுத்தி ஜெபித்தேன். கர்த்தர் என் கணவருக்குப் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

கட்டி மறைந்தது!



என்னுடைய மகன் கடந்த ஏப்ரல் மாதம் கீழே விழுந்ததால் அடிபட்டது. ஸ்கேன் பண்ணிப் பார்க்கும்போது வலது காலில் கட்டி இருக்கிறது என்று சொன்னார்கள். இது கேன்சர் கட்டியாக இருக்கலாம் என்று சொல்லி பயாப்சி டெஸ்ட் எடுக்க வேண்டும் என்று டாக்டர்கள் சொன்னார்கள். நான் மே 1ஆம் தேதி வாக்குத்தத்த ஆராதனையில் கலந்து கொண்டேன். சகோதரனைப் பார்த்து ஜெபித்து, ஜெப எண்ணெய் வாங்கிச் சென்றேன். ஞாயிறு ஆராதனையின் முதல் ஆராதனைக்கு குழந்தையை அழைத்து வரச் சொன்னார்கள். நானும் குழந்தையை ஞாயிறு ஆராதனைக்கு அழைத்து வந்து ஜெப எண்ணெய்ப் பூசி ஜெபித்துச் சென்றேன். மறுநாள் மருத்துவமனைக்குச் சென்று பையாப்ஸி எடுத்து பார்த்தபோது அது சாதாரணக் கட்டிதான். இப்பொழுது மறைந்து விட்டது என்று சொன்னார்கள். அந்தக் கட்டி தானாகவே மறையக் கர்த்தர் கிருபை செய்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! – சகோதரி கிறிஸ்டினா, மாதவரம்.

15 வருடங்கள் தலையில் இருந்த பிரச்சனையை மாற்றினார்!



நான் 15 வருடங்களுக்கு முன் கீழே விழுந்து விட்டேன். தலையில் அடிபட்டது அடிபட்ட இடத்தில் இருந்து பூச்சி ஓடுவதுபோல் இருக்கும். 15 வருடங்களாக இந்த பிரச்சனை இருந்தது. அப்பொழுது ஆசீர்வாதம் டிவியில் 21 நாட்கள் ஸ்தோத்திரப் பண்டிகை நிகழ்ச்சியில் கலந்து கொண்டேன். எனக்கு தலையில் பூச்சி ஓடுவதுபோல் இருந்ததை நினைத்து கவலையாக இருந்தது. சகோதரன் அவர்கள் ஜெப வேளையில் "உங்கள் தலையில் உள்ள எல்லாப் பிரச்சனைகளையும் கர்த்தர் நீக்கி போடுகிறார். எல்லாக் கட்டுகளையும் கர்த்தர் அறுத்து போடுகிறார்" என்று சொன்னார்கள். அப்பொழுது எனக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது. அன்றிலிருந்து இன்று வரை தலையில் பூச்சி ஓடுவதுபோல் இல்லை. கர்த்தர் பரிபூரண விடுதலையைக் கொடுத்தார். 3 மாதங்கள் ஆகிவிட்டது. எந்தப் பிரச்சனையும் இல்லை. தேவனுக்கே மகிமை உண்டாவதாக. – சகோதரி ஜெயசீலி, வரதராஜபுரம்.

மகளுக்கு வங்கியில் வேலை கிடைக்க உதவி செய்தார்!



என்னுடைய மகளுக்கு வேலை இல்லாமல் இருந்தது. கடந்த மாதம் உபவாசக் கூட்டத்தில் வந்து வேலைக்காக ஜெபித்துச் சென்றேன். ஜெபத்தைக் கேட்டுக் கர்த்தர் மகளுக்கு வங்கியில் வேலை கிடைக்கக் கிருபை செய்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

பாட்டியின் கை விரலை எடுக்காமல் அற்புத சுகம்!



என்னுடைய பாட்டிக்கு ஆகஸ்ட் 12ஆம் தேதி நடுவிரல் செப்டிக் ஆகியிருந்தது. மருத்துவர் பரிசோதித்து விட்டு, விரலை எடுக்க வேண்டும் என்று கூறினார்கள். அதினால் நாங்கள் மிகவும் கஷ்டப்பட்டோம். அந்நேரத்தில் ஆசீர்வாதம் டிவியைப் பார்த்தபொழுது, அதில் சகோதரி, "நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருந்தாலும் கர்த்தர் அவையெல்லாவற்றிலிருந்தும் விடுவிப்பார்" என்று தேவசெய்தி கொடுத்துக் கொண்டிருந்தார்கள். மறுநாள் மருத்துவமனைக்குச் சென்றபொழுது, விரலை எடுக்காமல் dead skin ஐ மட்டும் எடுக்கிறேன் என்று சொன்னார்கள். அடுத்த பத்து நாட்கள் அதைச் செய்தார்கள். இன்னும் சரியாகவில்லை என்ற கவலை எங்களுக்கு இருந்தது. ஆகஸ்ட் 23ஆம் தேதி திருச்சபையில் சேர்ப்பின் பண்டிகை நடைபெற்றது. அன்றைக்கு நான் என் பாட்டியை அழைத்து வந்து அவர்கள் கையினாலே கொடுக்கும்படி ஒரு பொருத்தனைக் காணிக்கை வைத்தேன். அதன்பின்பு திரும்ப மருத்துவமனைக்குச் சென்றபொழுது, கை விரல் ஆறி இருக்கிறது என்றார்கள். சகோதரன் 1000 ஸ்தோத்திரபலி செலுத்துங்கள், கர்த்தர் அற்புதம் செய்வார் என்று கூறினார்கள். நான் 1000 ஸ்தோத்திரபலிகளைச் செலுத்தினேன். கர்த்தர் என் பாட்டியின் விரலில் பூரண சுகத்தைக் கட்டளையிட்டார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! - சகோதரி அனு பிரீத்தா, வியாசர்பாடி.

5 வருடங்களுக்குப்பின் குழந்தை பாக்கியம்!



எங்களுக்குத் திருமணமாகி 5 வருடங்களாகக் குழந்தை பாக்கியம் இல்லை. எனக்குக் குழந்தை இல்லை என்பதால் நிறைய நிந்தைகள், போராட்டங்கள் இருந்தது. 2019ல் டிசம்பர் மாதம் ஆசீர்வாதம் டிவியின் உபவாசக் கூட்டத்தில் என்னுடைய கணவர் மட்டும் கண்ணீரோடு வந்து கலந்து கொண்டார்கள். "இயேசப்பா எங்களுக்குக் குழந்தையைக் கொடுங்கள்" என்று கண்ணீரோடு ஜெபித்தார்கள். சகோதரன் ஜெப வேளையில், "குழந்தை இல்லாதவர்களுக்குக் கர்த்தர் ஈசாக்கைக் கொடுப்பார்" என்று சொன்னார்கள். அதே போல் 2020ல் நான் கர்ப்பந்தரித்தேன். அழகான ஆண் குழந்தையைக் கர்த்தர் கொடுத்து ஆசீர்வதித்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

15 வருடங்களாக இருந்த இடுப்பு வலி நீங்கியது!



எனக்கு 15 வருடங்களாக இடுப்பு வலி அதிகமாக இருந்தது. இரவு முழுவதும் தூக்கமில்லாமல் அழுது கொண்டேயிருப்பேன். எவ்வளவோ மருந்து மாத்திரைச் சாப்பிட்டும் சரியாகவேயில்லை. கடந்த மாதம் நடந்த ஆசீர்வாதம் டிவியின் உபவாசக் கூட்டத்தில் என்னுடைய அம்மா கலந்து கொண்டார்கள். 1000 ஸ்தோத்திரபலி புத்தகத்தை வாங்கிக் கொண்டு வந்தார்கள். நானும் நம்பிக்கையோடு ஸ்தோத்திரபலிகளைச் சொல்லிக் கொண்டேயிருந்தேன். கர்த்தர் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். இடுப்பு வலியே இல்லை. இப்பொழுது நான் நிம்மதியாகத் தூங்குகிறேன். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

– சகோதரி முத்துலட்சுமி.

3 வருடங்களாகப் பிரிந்த குடும்பம் இணைந்தது!



என்னுடைய இளைய மகனுக்குத் திருமணமாகி ஒரு குழந்தை பிறந்தவுடன் குடும்பத்தில் பிரச்சனையாக இருந்தது. மருமகள் சண்டைப்போட்டு வீட்டிற்கு வரமாட்டேன் என்று சொல்லிவிட்டாள். 3 வருடங்களாகப் பிரிந்து இருந்தார்கள். எங்களால் பேரனைப் பார்க்க முடியவில்லை. 2 மாதங்களாக ஆசீர்வாதம் டிவியின் உபவாசக் கூட்டத்திற்கு வந்து ஜெபக்குறிப்பு எழுதிக் கொடுத்து ஜெபித்தேன். "என்னுடைய இளைய மகன் குடும்பம் ஒன்று சேர வேண்டும் மற்றும் பேரன் என் வீட்டிற்கு வர வேண்டும்" என்று ஜெபித்தேன். கடந்த ஜனவரி மாதம் வரமாட்டேன் என்று சொன்ன என்னுடைய மருமகள் அவளாகவே மனந்திரும்பி வரக் கர்த்தர் கிருபை செய்தார். அவளுடைய அம்மா வீட்டிற்கு வந்து விட்டுச் சென்றார்கள். என்னுடைய பேரனும் நன்றாக இருக்கிறான். மகனும், மருமகளும் சந்தோஷமாக இருக்கிறார்கள். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

– சகோதரி விஜயா, திருத்தங்கல்.

கெட்டுப்போன நுரையீரலைப் புதியதாக மாற்றினார் தேவன்!



என்னுடைய கணவர் கடந்த பிப்ரவரி மாதம் மிகவும் முடியாமல் சுயநினைவு இல்லாமல் இருந்தார். யாரையும் அடையாளம் தெரியவில்லை. அவரால் உடைகளைக் கூட போட முடியாமல் இருந்தார். மருத்துவமனைக்குச் சென்று பரிசோதித்துப் பார்த்தபொழுது நுரையீரலில் பிரச்சனை இருக்கிறது என்று சொன்னார்கள். அங்கு மருத்துவம் பார்த்தால் நிறைய செலவாகும் என்று அரசு மருத்துவமனைக்குச் சென்று பார்த்தோம். அநேக டெஸ்டுகள் எடுத்துப் பார்த்ததில் நுரையீரல் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று டாக்டர்கள் சொன்னார்கள். அவர்கள் வேலை செய்யும் இடத்தில் உள்ள இரும்புத் தூள்கள் எல்லாம் நுரையீரலில் சென்று அடைத்திருக்கிறது. அதனால் இனிமேல் டியூப் போட்டுதான் சுவாசிக்க முடியும் என்று சொன்னார்கள். எனக்கு மிகவும் பயமாக இருந்தது. "எங்களுக்கென்று யாருமே இல்லை. இயேசப்பா, நீங்கதான் துணையாக இருக்க வேண்டும்" என்று ஜெபித்து வீட்டுக்கு வந்து விட்டோம். நான் தினமும் அதிகாலையில் எழுந்து ஜெப எண்ணெயை மட்டும் பூசி ஜெபித்துக் கொண்டேயிருந்தேன். ஒரு மாதங்கழித்து மறுபடியும் மருத்துவமனைக்குச் சென்று செக் பண்ணிப் பார்த்தபோது, ஆண்டவர் நுரையீரலைப் புதிய நுரையீரலாக மாற்றியிருந்தார். இப்பொழுது என் கணவர் ஒரு வாரமாக வேலைக்குச் செல்கிறார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

– சகோதரி பானு, அம்பத்தூர்.

கேன்சர் கட்டியை மாற்றினார்! பிள்ளைகளின் திருமணத்தை நேர்த்தியாய் நடத்திக் கொடுத்தார்!



என்னுடைய மகள் 4 வருடங்களாகத் திருமணம் பண்ணிக் கொள்ளாமல் பிடிவாதமாக இருந்தாள். அதனால் எனக்குத் தெரிந்தவர்கள் என்னை ஆசீர்வாதம் டிவியின் உபவாசக் கூட்டத்திற்கு அழைத்து வந்தார்கள். நான் இங்கு வந்து என் மகளுக்காக ஜெபித்துச் சென்றேன். அடுத்த மாதம் என்னால் உபவாசக் கூட்டத்திற்குப் போக முடியவில்லை. ஏனென்றால் எனக்கு வயிறு வலி அதிகமாக இருந்தது. மருத்துவமனைக்குச் சென்று பார்த்தபோது கேன்சர் கட்டி என்று சொன்னார்கள். அதற்கு ஒரு மாதமாகச் சிகிச்சைக் கொடுத்தார்கள். அடுத்த மாதம் நடந்த உபவாசக் கூட்டத்தில் கலந்து கொண்டேன். சகோதரன் ஜெபவேளையில், "அநேக உபத்திரவங்களை அனுபவித்து உறவினர்களால் செய்வினைக் கட்டினால் பாதிக்கப்பட்வர்களுக்குக் கர்த்தர் விடுதலை கொடுக்கிறார்" என்று சொன்னார்கள். நானும் கண்ணீரோடு ஜெபித்துச் சென்றேன். இயேசப்பா, "எனக்குக் கேன்சர் கட்டியே இருக்கக் கூடாது. சகோதரன்மூலம் நீர் பேசின வார்த்தையை எனக்குச் செய்து காட்டுங்கள்" என்று கண்ணீரோடு மருத்துவமனையில் அழுதேன். டாக்டர் வந்து செக் பண்ணிப்பார்த்தபோது 'கேன்சர் கட்டியே இல்லை' என்று சொன்னார்கள். கர்த்தர் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். மேலும் என்னுடைய மகள் திருமணத்திற்காக ஜெபித்தேன். உபவாசக் கூட்டத்தில் சகோதரி ஜெப வேளையில், "பட்டுப்போன மரம்போல் இருக்கிறேனே என்று அழுதுக் கொண்டிருக்கிறாய். பட்டுப் போன மரம் ஒரு நாள் பூத்துக் குலுங்கும்" என்று சொன்னார்கள். நானும் சகோதரி சொன்ன வார்த்தையை எனக்கென்று பிடித்துக் கொண்டு ஒவ்வொரு நாளும் சகோதரி சொன்ன வார்த்தையைச் சொல்லி ஜெபித்தேன். அதே போல் கர்த்தர் என்னுடைய மகள் மற்றும் மகனுடைய திருமணத்தை நேர்த்தியாய் நடத்தி கொடுத்தார். நான் யாரிடத்தில் பிள்ளைகளால் தலைகுனிந்து நின்றேனோ அவர்கள் முன் தலைநிமிரச் செய்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

– சகோதரி அமுதா, திருவள்ளூர்.

கழுத்து நரம்புப் பகுதியில் இருந்த வேதனைச் சுகமானது!



எனக்கு ஒரு மாதமாகக் கழுத்து நரம்புப்பகுதியில் மிகுந்த வேதனை இருந்தது. கடந்த மாதம் நடந்த உபவாசக் கூட்டத்தில் சகோதரன் ஜெபித்தபோது, "கழுத்து வலி இருக்கிறவர்களுக்கு இப்பொழுதே சுகமாகிறது" என்று சொன்னார்கள். நானும் விசுவாசத்தோடு ஜெபித்தேன். அந்த நேரமே கர்த்தர் கழுத்து நரம்புப் பகுதியில் இருந்த வேதனையைச் சுகமாக்கினார். 5 நிமிடமாகக் கழுத்தைத் திருப்பிப் பார்த்தேன். கழுத்துப் பகுதியில் வலியே இல்லை. தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

– சகோதரி விஸ்வாந்தம்மாள், வேளச்சேரி.

அதிசயமாகக் குழந்தையின் உயிரை மீட்டுக் கொடுத்தார்!



எனக்கு நார்மல் டெலிவரியில் குழந்தை பிறந்தது. அதிகமான எடையோடு குழந்தை இருந்ததால் பிறக்கும்போது மூச்சுத்திணறல் வந்துவிட்டது. "2மணி நேரமாக என்ன குழந்தை பிறந்தது என்று கூடத் தெரியாமல் இருந்தோம். பிறகு டாக்டரிடம் கேட்கும் போது ஆண் குழந்தை பிறந்திருக்கிறது. ஆனால் உடல்நிலை சரியில்லாமல் இருக்கிறது" என்று சொன்னார்கள். உடனே எனக்கு லூக்கா 1:14 "உனக்குச் சந்தோஷமும் மகிழ்ச்சியும் உண்டாகும். அவன் பிறப்பினிமித்தம் அநேகர் சந்தோஷப்படுவார்கள்" என்ற வாக்குத்தத்தத்தைக் கர்த்தர் எனக்குக் கொடுத்தார். அதிகமாக மூச்சுத் திணறல் இருந்ததால் வேறொரு மருத்துவமனைக்கு மாற்றினார்கள். மறுநாள் என் பிள்ளையைப் பார்க்கும்போது பிள்ளையை என்னால் பார்க்க முடியாதபடி உயிருக்கு ஆபத்தான நிலையில் ஐ.சி.யுவில் இருந்தது. எந்த உணர்ச்சியும் இல்லாமல் ஒரு சடலத்தைப்போல 18 நாட்களாகப் பிள்ளை இருந்தது. குழந்தை பிழைக்கும் என்ற நம்பிக்கை டாக்டர்களுக்கே இல்லை. டாக்டர்கள் எங்களை அழைத்து ஆக்ஸிஜனை எடுக்கப் போகிறோம். பிள்ளை இறந்து விடும். எனவே எல்லா ஆயத்தங்களையும் செய்யச் சொன்னார்கள். உடனே ஆம்புலன்ஸை வரவழைத்தோம். நான் மட்டும் ஐ.சி.யு க்குள் போய் ஜெப எண்ணெயை எடுத்து, பிள்ளையின் சரீரம் முழுவதும் பூசினேன். என்னால் எவ்வளவு சத்தமாக ஜெபிக்க முடியுமோ அவ்வளவு சத்தமாய் ஜெபித்தேன். "நுரையீரலில் இயேசுவின் இரத்தம் இறங்க வேண்டும். இவனை உபத்திரவத்திலிருந்து எடுத்தேன்" என்று யாபேஸ் எனப் பெயரிடுவேன். "என்னுடைய குழந்தைக்கு உயிர் கொடுத்தால் ஊழியக்காரனாக வருவான். உங்க நாமத்தைக் குறித்துப் பேசுவான்" என்று பொருத்தனைப்பண்ணி ஜெபித்தேன். பின்பு கொஞ்ச நேரத்தில் டாக்டர்கள் வந்து டெஸ்ட் எடுக்கும்போது எல்லாமே நார்மல் என்று வந்தது. பிள்ளைக்குத் திரும்ப உயிர் வந்ததைப் பார்த்து டாக்டர்கள் ஆச்சரியப்பட்டார்கள். இனிப் பிள்ளைக்கு எந்தப் பாதிப்பும் இல்லை என்று சொன்னார்கள். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! - சகோதரி கனிமொழி, ஊத்துக்கோட்டை.

யானைக்கால் வியாதியைச் சுகமாக்கினார்!



எனக்கு யானைக்கால் நோய் இருந்தது. என்னால் வேஷ்டி மட்டும்தான் கட்ட முடியும். பேண்ட் போட முடியாது. மருத்துவமனைக்குச் சென்று பார்த்தபோது, "நீ மரிக்கும் வரை இந்த யானைக்கால் நோய் இருக்கும்" என்று டாக்டர்கள் சொன்னார்கள். அதிக வேதனையோடு இருந்தேன். எனக்குத் தெரிந்தவர்கள் "ராயப்பேட்டையில் ஆசீர்வாதப் பெருவிழா நடக்கிறது. அதில் கலந்து கொள்ளுங்கள். கர்த்தர் சுகம் தருவார்" என்று சொன்னார்கள். அவர்கள் சொல்லும்போது 2ஆம் நாள் கூட்டம் முடிந்து விட்டது. எனவே, மூன்றாம் நாள் கூட்டத்தில் கலந்து கொண்டேன். சகோதரன் ஜெபவேளையில், "யானைக்கால் நோயோடு வந்து அமர்ந்து இருக்கிற உன்னைக் கர்த்தர் நேசிக்கிறார். உன்னுடைய நோய்கள் குணமாகக் கர்த்தர் கிருபையளிக்கிறார்" என்று தீர்க்கதரிசனமாகச் சொன்னார்கள். அந்த நேரத்தில் தேவனுடைய வல்லமை மின்சாரம்போல் என் மீது இறங்கியதை நான் உணர்ந்தேன். ஜெப எண்ணெயை வாங்கிச் சென்றேன். வீட்டிற்குச் சென்று தினமும் ஜெப எண்ணெயைப் பூசி ஜெபித்தேன். கர்த்தர் யானைக்கால் நோயை முற்றிலும் சுகமாக்கி மான்களின் கால்களைப்போல் என் கால்களை மாற்றினார். கர்த்தர் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! - சகோ. ஜான் துளசிங்கம், மைலாப்பூர்

நாக்கின் அடியில் வளர்ந்த சதை அற்புதமாக மறைந்தது!



எனக்கு நாக்குக்கு அடியில் சுண்டு விரல் அளவுக்குச் சதை வளர்ந்திருந்தது. நான் கடந்த மாதம் ஆசீர்வாதம் டிவியின் உபவாசக் கூட்டத்திற்கு வந்து ஜெப எண்ணெய் வாங்கிச் சென்றேன். இயேசப்பா, "சதை மறைந்தால் நான் அடுத்த மாதம் வந்து சாட்சி சொல்லுவேன் என்று ஜெபித்து ஜெப எண்ணெயை நாக்கிற்கு அடியில் பூசினேன்." சதை இருந்த இடமே தெரியாத அளவிற்கு மறைந்தது. கர்த்தர் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! - சகோதரி பொன்னம்மாள், சங்கரலிங்கபுரம்.

குழந்தையின் யூரின் பிரச்சனை சரியானது! & அம்மாவுக்கு வீடு கட்டுவதில் இருந்த தடையை நீக்கினார்!



என்னுடைய பேத்திக்கு யூரினரி பிரச்சனை இருந்தது. மருத்துவமனைக்குச் சென்று ஸ்கேன் பண்ணிப் பார்த்தபோது நெரிக்கட்டி இருப்பதால் ஆப்ரேஷன் பண்ண வேண்டும் என்று சொன்னார்கள். ஆசீர்வாதம் டிவியின் உபவாசக் கூட்டத்தில் கலந்து கொண்டு. "என்னுடைய பேத்திக்கு ஆப்ரேஷன் இல்லாமல் சரியானால் நான் சாட்சி சொல்லுவேன்" என்று ஜெபித்துச் சென்றேன். பேத்திக்கு அடிக்கடி யூரின் போகும் பிரச்சனை நார்மலாக மாறியது. கர்த்தர் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். மேலும் என்னுடைய அம்மா வீடு கட்ட முடியாமல் நிறைய தடைகள் வந்தது. என்னுடைய அம்மாவிற்கு வீடு கட்டி முடித்தால் உபவாசக் கூட்டத்திற்கு வந்து சாட்சி சொல்லுவேன் என்று ஜெபித்தேன். ஜெபத்தைக் கேட்டு, என்னுடைய அம்மாவிற்கு வீடு கட்டி முடிக்கக் கர்த்தர் கிருபை செய்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! – சகோதரி ஜோஸ்பின் மேரி, கல்போது.

5 வருடங்களுக்குப்பின் குழந்தைபாக்கியம்!



என்னுடைய 2 பிள்ளைகளுக்கும் திருமணமாகி 5 வருடங்களாகக் குழந்தை பாக்கியம் இல்லை. நான் மிகவும் பாரத்தோடு ஜெபித்தேன். உபவாசக் கூட்டத்தில் சகோதரி ஜெபவேளையில், "பிள்ளைகளுக்கு குழந்தை இல்லை" என்று கவலைப்படுகிறீர்கள். நீங்கள் பொருத்தனையோடு கர்த்தரிடம் விண்ணப்பியுங்கள். ஒவ்வொரு நாளும் பிள்ளைச் செல்வத்திற்காகக் காணிக்கை எடுத்து வையுங்கள் என்று சொன்னார்கள். நானும் ஒவ்வொரு நாளும் காணிக்கை எடுத்து வைத்தேன். காணிக்கை எடுத்து வைத்த ஒரு மாதத்திற்குள்ளே என் மகள் கர்ப்பந்தரித்தாள். எனக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது. பிறகு 2 மாதம் கழித்து என்னுடைய மருமகளும் கர்ப்பந்தரிக்கக் கர்த்தர் கிருபை செய்தார். என்னுடைய மகளுக்கு ஒரு குழந்தையும் என் மருமகளுக்கு இரண்டு குழந்தைகளையும் கொடுத்து கர்த்தர் ஆசீர்வதித்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

மகனுக்குக் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை!



நான் 3 மாதங்களாக ஆசீர்வாதம் டிவியின் உபவாசக் கூட்டத்திற்கு வந்து கொண்டிருக்கிறேன். என்னுடைய மகன் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி இருந்தான். ஜனவரி மாதம் ஆசீர்வாதம் டிவியின் உபவாசக் கூட்டத்தில் கலந்து கொண்டு, "என்னுடைய மகன் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற வேண்டும் இயேசப்பா" என்று அழுது ஜெபித்து சென்றேன். அன்றிலிருந்து இன்று வரை என் மகன் குடிப்பதே இல்லை. கர்த்தர் என்னுடைய மகனுக்கு பரிபூரண விடுதலையைக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

கண்களில் சுகம் கொடுத்தார்!



நான் வேலை செய்யும் இடத்தில் ஏதோ ஒன்று என் கண்ணில் விழுந்து விட்டது. முள் குத்துவது போல வலி தாங்க முடியவில்லை. கண்ணீர் வந்துகொண்டே இருந்தது. அந்த நேரம் ஆசீர்வாதம் டிவியில் சகோதரன் செய்தி கொடுத்தார்கள். சகோதரன் ஜெபம் செய்யும்போது, "பெலவீனமானப் பகுதியில் கை வைத்து ஜெபியுங்கள்" என்று சொன்னார்கள். நானும் ஜெபஎண்ணெயைப் போட்டு விசுவாசத்தோடு ஜெபித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது சகோதரன், "கண்களில் இயேசுவின் இரத்தம் இறங்குகிறது" என்று சொன்னார்கள். அந்நேரமே கர்த்தர் எனக்குச் சுகத்தைக் கட்டளையிட்டார். கண்களில் இருந்த வலி போனது. தேவனுக்கே மகிமை உண்டாவதாக! – சகோதரி பாக்கியம், ஈக்காட்டுத்தாங்கல்.

கணவருக்கு முதுகுப் பகுதியில் அற்புத சுகம்!



என் கணவர் வண்டியில் வரும்போது ஒரு சின்ன ஜர்க்தான் ஆனது. ஆனால் முதுகுப் பகுதியில் ஜவ்வு கிழிந்து விட்டது. ஆனால் அந்த நேரம் டாக்டர்கள், "எந்தப் பிரச்சனையும் இல்லை" என்று சொல்லி விட்டார்கள். சில நாட்கள் கழித்து ஜவ்வு கிழிந்த இடத்தில் சீழ்ப்பிடித்து கிட்னி வரைப் பாதித்து விட்டது. உடனே மருத்துவமனையில் சேர்த்தோம். "முழுவதும் சீழ்ப்பிடித்தக் கடைசி நிலைமையில் கொண்டு வந்திருக்கிறீர்கள்" என்று சொல்லிவிட்டார்கள். "நான் கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பாருங்கள்" என்ற வசனத்தை மட்டும் சொல்லிக் கொண்டேயிருந்தேன். அப்பொழுது நான் 6 மாத கர்ப்பிணியாக இருந்தேன். என்னுடைய அம்மா, "சென்னை ஆசீர்வாதம் டிவியின் உபவாசக் கூட்டத்திற்கு வந்து என் கணவருக்குச் சரியானால் குடும்பமாகச் சாட்சி சொல்லுவோம்" என்று பொருத்தனைப்பண்ணி ஜெபித்து ஜெப எண்ணெய் வாங்கி வந்தார்கள். நாங்களும் விசுவாசத்தோடு ஜெப எண்ணெயை தினமும் பூசி ஜெபித்துக் கொண்டே இருந்தேன். சீழ் வடிவதற்கு 3 மாதங்கள் ஆனது. 3 மாதங்கழித்து என் கணவர் நடக்க ஆரம்பித்தார். எனக்கும் முதல் குழந்தை ஆப்ரேஷன் மூலமாகப் பிறந்ததால் இரண்டாவது குழந்தையும் ஆப்ரேஷன் மூலமாகத்தான் பிறக்கும் என்று டாக்டர்கள் சொன்னார்கள். ஆனால் கர்த்தர் நார்மல் டெலிவரியில் குழந்தை பிறக்கக் கிருபை செய்தார். இப்பொழுது நாங்கள் குடும்பமாகச் சாட்சி சொல்லும்படிக்கு கர்த்தர் அற்புதம் செய்திருக்கிறார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! - சகோதரி டாலிக் கிரேஸி, கள்ளக்குறிச்சி.

10 வருட அல்சர் பிரச்சனை நீங்கியது!



எனக்கு 10 வருடங்களாக அல்சர் பிரச்சனை இருந்தது. கை கால் முழுவதும் அலர்ஜிபோல் இருக்கும். இதனால் அரிப்பு அதிகமாக இருக்கும். தலை பாரமாக இருக்கும். சகோதரன் ஜெப வேளையில், "தலையில் மறுத்ததுபோல் இருக்கிறவர்களுக்குக் கர்த்தர் சுகம் கொடுக்கிறார்" என்று சொன்னார்கள். "இயேசப்பா எனக்கு அல்சர் பிரச்சனையும், அரிப்பும், மூலவியாதியும் இருக்கிறது. என்னைத் தொட்டு சுகப்படுத்துங்கள்" என்று கண்ணீரோடு ஜெபித்தேன். அப்பொழுது என்மீது 2 முறை ஜில்லென்று காற்றுபட்டதைப்போல தேவ வல்லமை என்மேல் இறங்கியதை உணர்ந்தேன். இப்பொழுது சரீரம்இலகுவாக இருக்கிறது. கர்த்தர் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! - சகோதரி மரிய தெரேசா, கிருஷ்ணகிரி

ஒரு வருட கை வேதனை சுகமானது! சொந்த வீடுகளைக் கொடுத்தார்!



நான் ஒரு வருடமாகக் கைவலியினால் மிகவும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறேன். என்னால் தூங்கவோ, சாப்பிடவோ முடியாது. குளிக்கக் கூட முடியாது. என்னுடைய மகள்தான் என்னைக் குளிப்பாட்டுவாள் மற்றும் சாப்பாடு தருவாள். நான் உபவாசக் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்று மிகவும் ஆசைப்பட்டேன். நான் தினமும் ஆசீர்வாதம் டிவியைப் பார்த்துக் கொண்டேயிருப்பேன். நான் கடந்த மாதம் நடந்த உபவாசக் கூட்டத்திற்கும் கைவலியோடுதான் வந்து கலந்து கொண்டு ஜெபித்தேன். கர்த்தர் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். இப்பொழுது கைத்தட்டி நன்றாகப் பாடக் கர்த்தர் கிருபை செய்தார். மேலும், நான் ஒவ்வொருநாளும் 30 மாத்திரைகள் காலையிலும் மதியமும் இரவும் சாப்பிட்டுக் கொண்டேயிருந்தேன். அதனால் வயிறு வலி அதிகமாக இருந்தது. அதற்காக மருத்துவமனைக்குச் சென்று மருந்து மாத்திரை சாப்பிட்டேன். இவ்வாறு 10 மாதங்களாக மருத்துவமனைக்குச் சென்று தூக்கமே இல்லாமல் இருந்தேன். இந்த மாதம் நடந்த ஆசீர்வாதம் டிவியின் உபவாசக் கூட்டத்தில் கலந்து கொண்டு ஜெபித்தேன். கர்த்தர் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். இப்பொழுது நன்றாகத் தூங்குகிறேன். மேலும், நான் சென்னைக்குப் பிழைப்புக்காக வந்தான். எனக்கு 5 பிள்ளைகள் இருப்பதால் மிகவும் கஷ்டப்பட்டேன். நான் வாடகை வீட்டில்தான் இருந்தேன். அரசு பள்ளியில்தான் 5 குழந்தைகளைச் சேர்த்து படிக்க வைத்தேன். நான் தினமும் ஆசீர்வாதம் டிவியைப் பார்ப்பேன். எனக்குச் சொந்த வீடு வேண்டும் என்று தினமும் ஜெபித்துக் கொண்டேயிருந்தேன். ஜெபத்தைக் கேட்டுக் கர்த்தர் எனக்குச் சென்னையில் இரண்டு சொந்த வீடுகளைக் கொடுத்து ஆசீர்வதித்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! - சகோதரி அன்பு,

நமது ஆசீர்வாதம் தொலைக்காட்சி ஊழியத்தில் உங்கள் பங்கு!

கணக்கற்ற மக்களுடைய கண்ணீரைத் துடைக்கவும், தேவஆசீர்வாதத்தைக் கொண்டு செல்லவும் காரணமாக இருக்கும் நமது ஆசீர்வாதம் டிவி ஊழியத்தைத் தாங்க முன்வாருங்கள்! ஒவ்வொரு மாதமும் இதற்காகச் செலவுபண்ணும் தொகை மிகவும் அதிகம். நமது தொலைக்காட்சியில் விளம்பரங்களோ அல்லது பண ஆதாயத்திற்கான எந்த நிகழ்ச்சியும் ஒளிபரப்பப்படுவதில்லை. நிகழ்ச்சிகள், பாடல்கள் கொடுக்கும் தேவ ஊழியர்களிடம் ஒளிபரப்புத்தொகை எதுவும் வாங்குவதில்லை. மேலும் எந்த ஒரு நிறுவனத்தின் உதவியும் இதற்கு இல்லை. இந்த டிவி நிகழ்ச்சியின்மூலம் பிரயோஜனமடைந்து வரும் தேவப்பிள்ளைகள் 5 அப்பம் 2 மீனுக்கு அடையாளமாகக் கொடுக்கும் காணிக்கைகளைக் கொண்டுதான் இதன் தேவைகள் சந்திக்கப்படுகின்றன. Satelliteக்குச் செலுத்தப்படும் தொகை, கேபிள் டிவி இணைப்புகள் மற்றும் DTHல் (AIRTEL, SUN DIRECT, TATA PLAY) ஒளிபரப்பப்படுவதற்காகும் செலவு, நிகழ்ச்சிகள் தயாரிப்புகளுக்காகும் செலவு, ஊழியத்தில் பணிபுரியும் சகோதர, சகோதரிகளுக்குக் கொடுக்கும் ஊதியம், உபகரணங்கள் பராமரிப்பு... என்று ஒவ்வொரு மாதமும் பல லட்சங்கள் தேவை உண்டு.

குக்கிராமங்களிலும் பட்டணங்களிலும் படித்த மற்றும் படிக்காத தேவப்பிள்ளைகளுக்கு வசனம் எளிதில் சென்றுசேர, கர்த்தர் இந்தக் கிருபையின் நாட்களில் நமக்கு ஈவாகக் கொடுத்திருப்பதுதான் ஆசீர்வாதம் டிவி ஊழியங்கள்! எனவே இந்த ஊழியத்தை ஒருவராய்ச் சுமப்பது அரிது.

"நீர்வளம் பொருந்திய இடங்களிலெல்லாம் விதை விதைக்கிற நீங்கள் பாக்கியவான்கள்." - ஏசாயா 32:20. "சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்." -2கொரி.9:6,7. கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

துதியுங்கள்! ஜெபியுங்கள்!


அநேகரால் எங்கள் நிமித்தம் ஸ்தோத்திரங்கள் செலுத்தப்படும்பொருட்டு நீங்களும் விண்ணப்பத்தினால் எங்களுக்கு உதவி செய்யுங்கள் [2கொரிந்தியர் 1:11].



அநேகருடைய ஸ்தோத்திரங்களினால் கிருபை பெருகும் [2கொரி. 4:15] என்று எழுதியிருக்கிறபடி தேவகிருபை, தேவதயவு, தேவமகிமை ஊழியத்திலும் எங்களிலும் பெருகும்படிக்கு எங்களுக்காகவும், ஊழியங்களுக்காகவும் தினமும் குறைந்தபட்சம் 300 ஸ்தோத்திரபலிகளை நீங்கள் ஏறெடுக்கவும், குறைந்தது 15 நிமிடங்கள் விண்ணப்பங்களைத் தேவனிடத்தில் ஏறெடுக்கவும் அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

வெள்ளிக்கிழமைதோறும் ஏதாகிலும் ஒரு நேரம் ஆசீர்வாதம் டிவி ஊழியங்களுக்காக உபவாசமிருந்து ஜெபியுங்கள்! செவ்வாய்க்கிழமைதோறும் ஏதாகிலும் ஒரு நேரம் ஆசீர்வாதத் திருச்சபை ஊழியங்களுக்காக உபவாசமிருந்து ஜெபியுங்கள்!

நமது தொலைக்காட்சி ஊழியங்களுக்குக் காணிக்கை அனுப்புவதற்கான விவரங்கள்!



9952432020@tmb என்ற UPI ID

மூலமாக எந்த Payment Appலிருந்தும் பணம் அனுப்பலாம்.

G Pay | PhonePe | paytm

9345678981 (Allen Paul)

என்ற எண்ணிற்கு உங்கள் காணிக்கைகளை அனுப்ப வசதி செய்யப்பட்டுள்ளது.

இணையதளம், Mobile Internet மூலம் காணிக்கை அனுப்பும் விபரம்:

www.blessingtv.tv/donation என்ற இணையதள முகவரியில் உங்கள் Debit card மூலம் நேரடியாகக் காணிக்கை அனுப்பும் வசதி செய்யப்பட்டுள்ளது.

வங்கி மூலம்

ICICI	TMB
'BLESSING TV'	'BLESSING TV'
A/C No. : 6172 0103 4129	A/C No. : 0041 5031 0875 177
BRANCH : SIVAKASI	BRANCH : VIRUDHUNAGAR
IFS CODE - ICIC 000 6172	IFS CODE : TMBL 000 0004

மணியார்டர் / eMo மூலம்

மணியார்டர் வாயிலாகக் காணிக்கை அனுப்புகிறவர்கள் நமது முகவரிக்கு நேரடியாகக் காணிக்கை அனுப்பலாம். மணியார்டர் படிவத்தில் தகவலுக்கான இடத்தில் உள்ள முழு முகவரியையும் பங்காளர் எண்ணையும் தெளிவாக எழுத மறவாதிருங்கள்!

டி.டி. / செக் மூலம்

டி.டி. மற்றும் செக் மூலம் காணிக்கை அனுப்புகிறவர்கள் 'BLESSING TV' என்ற பெயரில் உங்களுடைய டி.டி. மற்றும் காசோலையைத் தபால் அல்லது கூரியர் மூலம் அனுப்பலாம்.



JESUS LOVES
Blessing TV

வங்கி மூலம் நேரடியாகக் காணிக்கைச் செலுத்துவோர், தயவாகத் தங்கள் ரசீதுதனை (ஜெராக்ஸ்) எங்களுக்கு அனுப்பி, ரசீதைப் பெற்றுக்கொள்ளுங்கள். மேலும் இவ்வாறு அனுப்ப இயலாதவர்கள், கீழ்க்காணும் தொலைபேசி எண்களுக்கு SMS மூலமாக உங்கள் பெயர், முகவரி மற்றும் காணிக்கை விபரங்களை அனுப்பிவிடலாம். WhatsApp அல்லது இ-மெயில் மூலமாகவும் தெரியப்படுத்தலாம். Whatsapp : 9994079994, 9952432020.

முகவரி: பிளஸ்ஸிங் டி.வி., எழுப்புதல் ஜெப மையம், சூலக்கரை, விருதுநகர் - 626 003, தமிழ்நாடு. (அல்லது)
பிளஸ்ஸிங் டி.வி., எண். 3, இரண்டாம் தெரு, கீழ்ப்பாக்கம் கார்டன் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை – 600 010, தமிழ்நாடு.
Our Address : BLESSING TV, REVIVAL PRAYER CENTRE, SOOLAKKARAI, VIRUDHUNAGAR - 626 003, TAMILNADU. (or)
BLESSING TV, No. 3, Second Street, Kilpauk Garden Road, Kilpauk, CHENNAI - 600 010, TAMILNADU.
Email : allenbtv@gmail.com Website : www.blessingtv.tv

மேலும் விபரங்களுக்குத் தொடர்புகொள்ள : 9994 07 9994 (காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை)



சத்துரு உட்புகுதலும் குடியோடிப் போகுதலும் இராது!

"...சத்துரு உட்புகுதலும் குடியோடிப்போகுதலும் இராது..." - சங்கீதம் 144:14

பிரியமானவர்களே, சத்துரு நம்முடைய எல்லைகளுக்குள் புகக்கூடாது. நம்முடைய எல்லைகளுக்குள் இருக்கிற நன்மைகள், ஆசீர்வாதங்கள் ஆகிய எதுவும் வெளியே போகக்கூடாது. சத்துரு உட்புகக்கூடாது. நம்முடைய நன்மைகள் வெளியே போகக்கூடாது என்கிற எண்ணம் எல்லோருக்கும் இருக்கும்.

பத்து வெள்ளிக் காசுகள் வைத்திருந்த பெண்ணிடம் ஒரு வெள்ளிக்காசு தொலைந்துபோய்விட்டது. அப்பொழுது அந்தப் பெண்," பரவாயில்லை. ஒன்றுதானே தொலைந்தது, மற்ற ஒன்பது காசுகள் இருக்கிறது அல்லவா" என்று எண்ணவில்லை. விளக்கைக் கொளுத்தி, வீட்டைப் பெருக்கி, அதைத் தேடிக் கண்டுபிடித்து மிகுந்த சந்தோஷமடைந்தாள் அந்தப் பெண்! என்னுடைய ஒரு காசு தொலைந்து விட்டது. அதை நான் தேடி எடுத்துவிட்டேன் என்று அருகில் இருக்கிறவர்களிடம் கூறி சந்தோஷப்பட்டாள். நம்முடைய உடைமைகளில் ஒன்று தொலைந்துபோனால் போகட்டும், வேறு வாங்கிக் கொள்ளலாம் என்று நாம் விட்டுவிடுவதில்லை. அதை நாம் எப்படியாவது தேடிக் கண்டுபிடித்து சந்தோஷப்படுவோம் அல்லவா! அதைப்போல நம்முடைய எல்லைகளுக்குரிய ஆசீர்வாதங்கள் ஒன்றும் வெளியே போவது யாருக்கும் இஷ்டம் கிடையாது. சத்துரு உட்புகவே கூடாது.

கொரோனா கொள்ளைநோய் வந்த காலத்தில் நாம் எல்லோரும் முகக்கவசம் அணிந்திருந்தோம். கிருமி நம்முடைய கண்களுக்கே தெரியாது. எப்படிக் கொரோனா நமக்குள்ளே வருகிறது என்றே தெரியாது. அது ஒரு வைரஸ் கிருமிதான். அது நமக்குள்ளே வரக்கூடாது எனப் பலவிதமான பாதுகாப்புகளை நாம் அமைத்துக் கொண்டோம். அரசாங்கமும் அதற்குப் பலவிதமான சட்டங்களைப் போட்டு, lockdown போட்டு, மக்களை வெளியே வரவிடாமல், அத்தியாவசியத் தேவைகளுக்கு மட்டும் வெளியே வரச் செய்தார்கள். காய்கறிகளை, பழங்களை வாங்கி வரும்போது அதை வெளியில் வைத்து நன்றாகக்



சகோதரி சோபியா ஆலன்பால்

கழுவி சுத்திகரித்து உள்ளே கொண்டு செல்வோம். ஒரே ஒரு வைரஸ் உள்ளே வந்துவிடக் கூடாது என்பதற்காக இத்தனைப் பாதுகாப்புகள் செய்தோம். வைரஸ் உள்ளே வந்தால் உயிருக்கே ஆபத்தாகிவிடும். அநேகர் மரித்துப் போனார்கள்.

அப்படித்தான் சத்துருவும்கூட எப்படி ஒரு நபருக்குள்ளாக வருகிறான், எப்படி ஒரு குடும்பத்திற்குள் வருகிறான் என்பது நமக்குத் தெரியவே தெரியாது.

ஒரு முறை வனாந்தரத்தில் ஒட்டகத்தில் பயணம் செய்த ஒரு நபர் இரவு நேரத்தில் தான் தங்குவதற்கு ஒரு கூடாரம்போட்டு உள்ளே சென்றார். ஒட்டகத்தை வெளியே கட்டி வைத்திருந்தார். அந்த ஒட்டகம் அந்த



நபரிடம் ''இரவில் குளிர் அதிகமாக இருந்ததால் தலையை மாத்திரம் உள்ளே விட்டுக் கொள்கிறேன்'' என்று சொன்னதாம். கொஞ்ச நேரம் கழித்து, ''என்னுடைய உடம்பை மாத்திரம் உள்ளே வைத்துக்கொள்கிறேன்" என்று சொன்னதாம். அதன்பின்பு, "என் முன் கால்களை உள்ளே விட்டுக் கொள்கிறேன்''. அதன்பின்பு பின் கால்களை உள்ளே விட்டுக் கொள்கிறேன் என்று சொல்லி முழுவதுமாகக் கூடாரத்திற்குள் வந்துவிட்டதாம். சத்துருவின் உட்புகுதலும் இப்படித்தான் இருக்கும். சத்துரு மனிதனை மயக்கி, மயக்கி கொஞ்சம் கொஞ்சமாக உள்ளே வந்துவிடுவான்.

''மாயையைப் பேசும் வாயும், கள்ளத்தனமான வலதுகையும் உடைய அந்நிய புத்திரரின் கைக்கு என்னை விலக்கித் தப்புவியும்." - சங்கீதம் 144:11

அப்பொழுது சத்துரு உட்புகுதலும் குடியோடிப்போகுதலும் இராது என்றார்.

பொய் பேசுகிற வாயை உடையவர்களும், கள்ளத்தனமான வலது கையை உடைய தேவனை அறியாத ஜனங்கள், ஆண்டவருக்குப் பிரியமில்லாத காரியங்களைச் செய்கிறவர்கள் கைக்கு எங்களை விலக்கித் தப்புவியும். அப்பொழுது சத்துரு உள்ளே வரமுடியாது. என்னுடைய எல்லையிலிருந்து எந்த நன்மையும் வெளியே போக முடியாது என்று தாவீது உறுதியாகச் சொல்லுகிறார்.

ஒரு விமானத்தில் பயணம் செய்வதற்கு ஏராளமான சட்ட திட்டங்களை வைத்திருக்கிறார்கள். விமான நிலையத்திற்குள் செல்லுவதற்கே நம்மிடம் டிக்கெட் இருக்க வேண்டும். அல்லது விமான நிலையத்தில் பணிபுரிபவர்களாயிருந்தால் அவர்களுடைய அடையாள அட்டையைக் காண்பித்தால் அவர்களை உள்ளே அனுமதிப்பார்கள். பிரயாணம் பண்ணுகிறவர்கள் மற்றும் வேலை பார்ப்பவர்கள் ஆகியோரைத் தவிர வேறு யாரும் விமான நிலையத்திற்குள் நுழையக்கூடாது.

விமான நிலையத்திற்குள் நாம்

சென்றபிறகு, நம்மிடம் டிக்கெட் இருந்தாலும்கூட நம்முடைய உடைமைகளை அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும். அதை அவர்கள் சோதித்து விமானத்திற்குள் ஏற்றுவார்கள். பயணிகளாகச் செல்பவர்களைப் பாதுகாப்புச் சோதனை செய்வார்கள். ஆண்கள், பெண்களைத் தனித்தனியாக வைத்து scanning/ screening செய்வார்கள். ஒரு pin இருந்தால்கூட அதைக் கழட்டிவிடச் சொல்லுவார்கள். எல்லாவற்றையும் சோதித்துத்தான் விமானத்தில் ஏற்றுவார்கள். எதற்கென்றால் விமானத்தில் தவறான விஷமிகள் யாரும் வந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான்! அவர்கள் கையில் வேண்டாத ஆயுதங்கள் இருந்துவிடக் கூடாது என்பார்கள். ஒரு nail cutter நம்முடைய hand bag ல் இருந்தால்கூட அந்த bag ஐ உள்ளே அனுமதிக்கமாட்டார்கள். எதையாகிலும் வைத்து விஷமிகள் பயணிகளுக்குத் தீங்கு விளைவித்துவிடக் கூடாது. விமானத்தைக் கடத்திவிடக் கூடாது என்பதற்காகத்தான் இவ்வளவு பரிசோதனைகளையும், சட்ட திட்டங்களையும் வைத்திருக்கிறார்கள்.

நம்முடைய குடும்பமும் ஒரு விமானத்தைப் போன்றதுதான்.



விமானத்திற்கு எவ்வளவு பாதுகாப்புக் கொடுக்கிறார்கள். நம்முடைய குடும்பத்திற்கு அவ்வளவு பாதுகாப்பு அவசியமாயிருக்கிறது. நம்முடைய குடும்பமாகிய விமானம் பரலோகத்தை நோக்கி தூரமானப் பிரயாணம் சென்று கொண்டு இருக்கிறது. வழியில் அது எந்த விதத்திலும் பழுதடைந்து விடக்கூடாது. அதில் விஷமிகள் ஏறுவதினால் ட்ராக் மாறி விடக்கூடாது. அந்த இடத்திற்குப்போய்ச் சேர முடியாமல் போய்விடக் கூடாது. சத்துரு உட்புகக்கூடாது.

விசேஷமாகப் பெண்கள் குடும்பத்திற்காகத் திறப்பில் நின்று ஆண்டவரிடத்தில் போராட வேண்டும். ஒரு குடும்பத்தைப்போல மற்றொரு குடும்பம் இருக்காது. ஒவ்வொரு குடும்பத்திலும் சத்துரு ஒவ்வொருவிதமாக உள்ளே வருவான். எந்த விதத்திலே சத்துரு உங்கள் குடும்பத்திற்குள் வருவான் என்பதைப் பார்த்து, அந்தக் களை விதையாக இருக்கும்போதே அதை அழித்துவிட வேண்டும். சத்துரு முதலில் விதையைத் தான் போடுவான். அது முளைத்து மரமாக மாறிவிட்டால் அதை உங்களால் அசைக்கவே முடியாது. அதைப் பிடுங்க முடியாது. சத்துரு உள்ளே வருவதற்கு இடம் கொடுக்கக் கூடாது. தனிப்பட்ட வாழ்க்கையிலும், பரிசுத்தத்திற்கு அடுத்தக் காரியத்திலும், தேவனோடு உள்ள உறவிலும், எந்தவிதத்திலும் சத்துரு உட்புகுந்து அதைப் பின்னோக்கிச் செல்ல இழுக்காதபடிக்கு, எல்லாவற்றிலும் நாம் ஜாக்கிரதையாய்க் காணப்பட வேண்டும். சத்துரு உட்புகக் கூடாது. குடியோடிப்போகக் கூடாது.

3 விதங்களில் சத்துரு உள்ளே வருவதற்கு வழிகள் இருக்கின்றன.

சமூக வலைதளம் மூலம் சத்துரு உள்ளே வரமுடியும். இதில் நன்மையும் இருக்கிறது. தீமையும் இருக்கிறது. பொய்யும் இருக்கிறது. மெய்யும் இருக்கிறது. பிள்ளைகள் கற்றுக்கொள்ள வேண்டிய விஷயங்கள் இருக்கிறது. பிள்ளைகள் அறியக்கூடாத விஷயங்கள் இருக்கிறது. இதில் வாலிபப் பிள்ளைகள், சிறுபிள்ளைகள் அறியாமல் சிக்கிக் கொள்ளக்கூடாது.



யாக்கோபின் மகள் தீனாள், தாய், தகப்பனோடு, சகோதரர்களோடு நல்ல பக்தியோடு, ஒழுக்கத்தோடுதான் வளர்ந்திருப்பாள். ஆனாலும் கூட அவள் ஊரைச் சுற்றிப்பார்த்து வருகிறேன் என்று சொல்லிச் சென்றாள். மாயைப் பேசும் வாயையுடைய, கள்ளத்தனமான வலது கையையுடைய சீகேம் என்ற மனிதனால் அவள் ஏமாற்றப்பட்டாள்.

யாக்கோபுடைய குடும்பம் வேறு பிரிக்கப்பட்டு, 12 கோத்திரங்களையும் கர்த்தர் தெரிந்தெடுத்து, உன்னதமான நோக்கத்தோடுகூட கர்த்தர் அந்தக் குடும்பத்தைக் கட்டியெழுப்பினார். ஆனால் அந்த நேரத்தில் தீனாள் அறியாமல் தன் வாலிபப்பிராயத்தில் சீகேம் ஊர் புதிதாக இருக்கிறதே, அதைப் போய்ப் பார்த்துவிட்டு வருவோம் என்று சென்றாள். அன்றைக்கு நேரடியாகப் போய்ப் பார்த்தாள்.

ஆனால் இன்றைக்கு எல்லோருடைய கையிலும் phone இருக்கிறது. இந்த phone மூலம் அமெரிக்காவில் என்ன நடக்கிறது? டிக்கெட் இல்லாமல் போய்ப் பார்க்கலாம். மேலும் YouTubeல் vlog எனத் தங்களுடைய எல்லாக் காரியங்களையும் ஒருசிலர் போட்டுக் கொண்டேயிருக்கிறார்கள். இப்பொழுது ஊர் சுற்றிப் பார்க்க அலைய வேண்டியதில்லை. நம்முடைய கைகளுக்குள்ளே எல்லா ஊர்களும் வந்துவிட்டது. இதன் மூலம் சத்துரு உங்கள் குடும்பத்தில் உட்புகாதபடிக்கு கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

வசனத்தைத்தான் பார்க்கிறேன் என்று சொல்லி, யார் யார் எப்படிப் பேசுகிறார்கள் என்று சொல்லிப் பார்க்கிற தேவப்பிள்ளைகளும் உண்டு. தெளிவான, கலப்படமில்லாத வசனங்கள் உங்களிடம் வந்து கொண்டிருக்க, சத்துரு உங்களிடம் கலப்படமான வசனத்தை இருதயத்தில் போட்டு உள்ளே புகுவதற்கு யோசிப்பான். பின்பு உங்களையும் அறியாமல் சத்துரு உள்ளே வந்துவிடுவான்.

ஏதேன் தோட்டத்திலே சத்துரு

உட்புகுந்தான். சர்ப்பம் அவர்களை ஏமாற்றி வஞ்சித்தது. சர்ப்பம் உள்ளே வருவதற்கு இடமே நாம் கொடுக்கக் கூடாது. மனுக்குலத்தைத் தேவன் ஒரு உயர்வான நோக்கத்திற்கு உண்டாக்கினார். ஆனால் அந்தச் சர்ப்பம் உள்ளே வந்ததினாலே ஆண்டவருடைய திட்டத்தைச் சிதைத்துப் போட்டுவிட்டது. நம்முடைய வாழ்க்கையிலும் குடும்பத்திலும் சர்ப்பத்தைப்போல சத்துரு உள்ளே நுழையாதபடிக்கு நாம் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

2. எச்சரிப்பாய் வருகிற கர்த்தருடைய வார்த்தைகளை ஒருநாளும் நாம் மீறக் கூடாது.

அவன் அநேகக் குதிரைகளைச் சம்பாதியாமலும், அநேகக் குதிரைகளைத் தனக்குச்



சம்பாதிக்கும்படிக்கு ஜனங்களைத் திரும்ப எகிப்திற்குப் போகப்பண்ணாமலும் இருக்கக்கடவன்; இனி அந்த வழியாய் நீங்கள் திரும்பிப்போக வேண்டாம் என்று கர்த்தர் உங்களுக்குச் சொல்லியிருக்கிறாரே.

''அவன் இருதயம் பின்வாங்கிப் போகாதபடி அவன் அநேகம் ஸ்திரீகளைப் படைக்கவேண்டாம்; வெள்ளியும் பொன்னும் தனக்கு மிகுதியாய்ப் பெருகப்பண்ணவும் வேண்டாம்.''
- உபாகமம் 17:16,17

இதில் மோசேயின் மூலமாக ஆண்டவர், ''நீங்கள் போய்க் குடியிருக்கும் தேசத்தில் உங்களுக்கு ஒரு இராஜா வேண்டும் என்று விரும்ப வேண்டாம்; குதிரைகளை வாங்க வேண்டும் என்று சொல்லி எகிப்திற்குத் திரும்பப் போக வேண்டாம்; அநேகம் பெண்களைத் திருமணம் செய்ய வேண்டாம்; அந்நியப் பெண்களை மணந்து கொள்ள வேண்டாம்" என்றும் கூறினார். அவர்கள் உங்கள் கண்களுக்கு முள்ளாக இருப்பார்கள் என்று யோசுவா மூலம் கூறினார். இவையெல்லாம் எச்சரிப்பாய்ச் சொல்லப்பட்ட வார்த்தைகள்! எகிப்துக்குப் போக வேண்டாம் என்று ஆபிரகாமுக்குச் சொன்னார். அதைப்போல ஈசாக்கிடம் கர்த்தர் நீ எகிப்துக்குப் போக வேண்டாம். இந்தப் பெலிஸ்தருடைய தேசத்திலே விதை விதைக்க வேண்டும் என்று கூறினார். ஆண்டவர் ஒரு காரியத்தைச் சுட்டிக்காட்டி அதைச் செய்ய வேண்டாம் என்று கூறினால் அதில் மிகுந்த ஜாக்கிரதையாய் நாம் இருக்கவேண்டும்.

தாவீதுக்குப் பின்பு வந்த சாலொமோனுடைய வாழ்க்கையில்,

''சாலொமோன் எகிப்தின் ராஜாவாகிய பார்வோனோடே சம்பந்தங்கலந்து, பார்வோனின் குமாரத்தியை விவாகம்பண்ணி, தன்னுடைய அரமனையையும்

கர்த்தருடைய ஆலயத்தையும் எருசலேமின் சுற்றுமதிலையும் கட்டித் தீருமட்டும் அவன் அவனைத் தாவீதின் நகரத்தில் கொண்டுவந்து வைத்தான்."

- 1இராஜாக்கள் 3:1

ஆண்டவர் எகிப்திற்குச் சென்று குதிரைகளையே வாங்கப் போக வேண்டாம் என்று சொல்லியிருந்தார். ஆனால் சாலொமோன் பார்வோனுடைய குமாரத்தியைத் திருமணம் செய்து, தன்னுடைய மாளிகைக்குக் கொண்டு வந்ததை நாம் பார்க்கிறோம். சத்துரு உட்புகுவதற்கு இவ்வளவு பெரிய ஓட்டையைச் சாலொமோன் போட்டுக் கொடுத்தார். அதே நேரத்திலே தனக்கு வேண்டிய குதிரைகளையும் எகிப்திலிருந்து கொண்டு வந்ததை நாம் பார்க்கின்றோம்.



''சாலொமோன் தனக்குக் குதிரைகளையும் புடவைகளையும் எகிப்திலிருந்து அழைப்பித்தான்; ராஜாவின் வர்த்தகர் புடவைகளை ஒப்பந்த விலைக்கிரயத்திற்கு வாங்கினார்கள்.

எகிப்திலிருந்து வந்த ஒவ்வொரு இரதத்தின் விலை அறுநூறு வெள்ளிக்காசும், ஒவ்வொரு குதிரையின் விலை நூற்றைறம்பது வெள்ளிக்காசுமாயிருந்தது. இந்தப் பிரகாரம் ஏத்தியரின் ராஜாக்களெல்லாருக்கும், சீரியாவின் ராஜாக்களுக்கும், அவர்கள் மூலமாய்க் கொண்டுவரப் பட்டது.''

- 1இராஜாக்கள் 10:28,29

எகிப்திற்குப் போக வேண்டாம் என்று கூறினார். ராஜாவை ஏற்படுத்தினால் அவன் குதிரைகளைக் கூட வாங்க வேண்டாம் என்று கூறினார். ஆனால் சாலொமோன் ஏராளமான ரதங்கள் மற்றும் குதிரைகளை எகிப்திலிருந்து வாங்கிக் குவித்ததை நாம் பார்க்கின்றோம். ஏத்தியர், எபூசியர், கானானியர், மோவாபியர், அம்மோனியர் என யாரையெல்லாம் கர்த்தர் அருவருத்தாரோ அவர்களுடைய குடும்பங்களிலிருந்துப் பெண்களைத் தன்னுடைய மறுமனையாட்டியாக சாலொமோன் எடுத்துக் கொண்டதைப் பார்க்கின்றோம்.

''ராஜாவாகிய சாலொமோன், பார்வோனின் குமாரத்தியை நேசித்ததுமல்லாமல், மோவாபியரும், சீதோனியரும், ஏத்தியருமாகிய அந்நிய ஜாதியாரான அநேகம் ஸ்திரீகள்மேலும் ஆசைவைத்தான்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை நோக்கி: நீங்கள் அவர்களண்டைக்கும் அவர்கள் உங்களண்டைக்கும் பிரவேசிக்கலாகாது; அவர்கள் நிச்சயமாய்த் தங்கள் தேவர்களைப் பின்பற்றும்படி உங்கள் இருதயத்தைச் சாயப்பண்ணுவார்கள் என்று

சொல்லியிருந்தார்; சாலொமோன் அவர்கள்மேல் ஆசைவைத்து அவர்களோடு ஐக்கியமாயிருந்தான்."
- 1இராஜாக்கள் 11:1,2.

அவர்கள் நிச்சயமாக உங்களை வழிவிலகச் செய்வார்கள். அவர்களுடைய தேவர்களைப் பின்பற்றும்படியாகச் செய்வார்கள் என்று முன்பே தேவன் எச்சரித்திருந்தார்.

அவனுக்குப் பிரபுக்கள் குலமான எழுநூறு மனையாட்டிகளும், முந்நூறு மறுமனையாட்டிகளும் இருந்தார்கள், அவனுடைய ஸ்திரீகள் அவன் இருதயத்தை வழுவிப்போகப் பண்ணினார்கள்.



ஆயிரம் காளைகளைக் கர்த்தருக்குப் பலியிட்டு, அவரை மகிமைப்படுத்தி, ஆலயத்தைக் கட்டின சாலொமோனுடைய இருதயம் அந்நியப் பெண்களால் வழுவிப்போனது.

சத்துருவுக்கு சாலொமோன் இடம் கொடுத்ததினாலே, கர்த்தரை விட்டுப் பின்வாங்குகிற இருதயத்தைச் சாலொமோன் சீக்கிரமாய்ப் பெற்றுக் கொண்டார். ஒருபக்கம் எருசலேமிலே கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டித் தொழுது கொண்டார். அதற்கு எதிரில் இருக்கிற மலையிலே விக்கிரகங்களுக்குக் கோவில் கட்டி பலி செலுத்தச் சாலொமோன் இடம் உண்டாக்கினார்.

இன்றைக்கு தேவனுடைய பிள்ளைகளுடைய வாழ்க்கையில் பார்க்கும்பொழுது, இரட்சிக்கப்பட்டு, ஞானஸ்நானம் எடுத்து, திருவிருந்து எடுத்து, ஆலயத்திற்குத் தொடர்ந்து வந்து, வசனத்திற்குக் கீழ்ப்படிந்து வாழுகிறவர்களின் இருதயத்தை தேவனை அறியாமல் வாழ்பவர்கள் வஞ்சித்து விடுகிறார்கள். வாலிபப் பிள்ளையினுடைய இருதயம் வஞ்சிக்கப் படுகின்றது.

சத்துரு உட்புகுவதற்கு இடம் கொடுத்தால் குடியோடிப் போகுதல் நடந்துவிடும். இப்படி அநேகக் குடும்பத்தில் பல பிரச்சனைகள், போராட்டங்கள் இருக்கின்றன. அதனோடுகூட இச்சை, பொருளாசை, பண ஆசை ஆகியவற்றால் சத்துரு உட்புகுகின்றான். பண ஆசையினால் யூதாஸுக்குள் சாத்தான் புகுந்தான் என்று பார்க்கின்றோம்.

உங்களுடைய வாழ்க்கையில் சத்துரு உட்புகுவதற்கு இடம் கொடுக்கக் கூடாது. குடியோடிப்போகுதல் இருக்கக் கூடாது. குடும்பத்திலுள்ள நன்மைகள் உங்களைவிட்டுப் புறப்பட்டுப் போகக் கூடாது. அதற்கு நீங்கள் மாயைப் பேசுகிற வாய்க்கும், கள்ளத்தனமான வலது கையையுடைய அந்நிய புத்திரருக்கும் விலகியிருங்கள். எச்சரிக்கையாயிருங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்! ■



அறிவியல் செய்திகள்!

89 ஆண்டுகளுக்குப் பிறகு ஆச்சரியப்படுத்திய அரிதான பிரைமேட் உயிரினம் (Primate)- அழிவின் விளிம்பில் இருந்து மீண்ட 'பாங்கா ஸ்லோ லோரிஸ்'

சுமார் 89 ஆண்டுகளாக அழிந்து விட்டதாகக் கருதப்பட்ட உலகிலேயே நச்சுத்தன்மைக் கொண்ட அரிதான 'பாங்கா ஸ்லோ லோரிஸ்' பிரைமேட் உயிரினம் இந்தோனேசியாவின் பாங்கா தீவில் மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தோனேசியாவில் உள்ள பாங்கா தீவில் (Bangka Island) சுமார் 89 ஆண்டுகளாக அறிவியலாளர்களின் பார்வையில் படாமல் அழிந்துவிட்டதாகக் கருதப்பட்ட 'பாங்கா ஸ்லோ லோரிஸ்' (Bangka slow loris) எனும் அரிதான எட்டிப்பார்க்கும் பிரைமேட் (Primate) உயிரினம் மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. உலகிலேயே நச்சுத்தன்மைக் கொண்ட ஒரே பிரைமேட் வகையான இந்த விலங்கு, கடைசியாக 1937-ஆம் ஆண்டு ஆவணப்படுத்தப்பட்ட நிலையில், தற்போது மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது ஆராய்ச்சி உலகை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

2015 முதல் 2025 வரையிலான காலகட்டத்தில், பாங்கா தீவின் பல்வேறு பகுதிகளில் 90க்கும் மேற்பட்ட இந்த உயிரினங்கள் பதிவாகியுள்ளன. அறிவியலாளர்கள் சென்று பார்க்காத குடியிருப்புப் பகுதிகளுக்கு மிக அருகிலேயே, அதாவது மின்சாரக் கம்பிகள், வீட்டின் பின்புறங்கள் மற்றும் சாலை ஓரங்களில் இவை காணப்பட்டது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. இரவு நேரத்தில் விழித்திருக்கும் மரவாழிகளான இவை பாங்கா, சுமத்ரா மற்றும் போர்னியோ ஆகிய இந்தோனேசியத் தீவுகளில் வாழக்கூடியவை . சுமார் 10 அங்குல சராசரி அளவு கொண்ட சிறிய உடலமைப்பைக் கொண்ட இவை சுமத்ரா,சோம்பேறி லோரிஸை விட அளவில் சிறியவை ஆகும்.



இந்த உயிரினங்கள் தங்கள் கையில் உள்ள சுரப்பியை நக்கி நச்சைச் செயல்படுத்துகின்றன. மனிதர்களுக்கு இந்த நச்சு கடுமையான ஒவ்வாமை எதிர்வினையை (Anaphylactic shock) ஏற்படுத்தக்கூடும் என்றாலும், இவை முதன்மையாகத் தற்காப்பு மற்றும் தங்களுக்குள்ளான சீர்ப்படுத்தும் நடவடிக்கைகளுக்கே (Defensive grooming) இந்த நச்சைப் பயன்படுத்துகின்றன.

மீட்கப்பட்ட உயிரினங்களில் பல காயமடைந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டன. குறிப்பாக மின்சாரக் கம்பிகளில் சிக்கியும், நாய் தாக்குதலுக்கு உள்ளாகியும் காயமடைந்த சில உயிரினங்கள் 'அலோபி' வனவிலங்கு மீட்பு மையத்தால் (Alobi Wildlife Rescue Centre) காப்பாற்றப்பட்டு, அவற்றில் 86 உயிரினங்கள் மீண்டும் காடுகளில் வெற்றிகரமாக விடுவிக்கப்பட்டன.

நீண்ட காலமாக அழிந்துவிட்டதாகக் கருதப்படும் பிற உயிரினங்களும், அறிவியலாளர்கள் பல தசாப்தங்களாக ஆய்வு செய்யாத இடங்களில் இன்னும் உயிருடன் வாழக்கூடும் என்பதற்கு இந்த 'மீண்டும் கண்டறிதல்' ஒரு நம்பிக்கையை அளிப்பதாக ஆய்வாளர் திமோன் கிளா (Timon Glaw) தெரிவித்துள்ளார். மேலும் இந்த உயிரினத்தைக் கண்டறிந்தது அதைப் பாதுகாப்பதற்கான முதல் படி மட்டுமே என்றும், ஆராய்ச்சி, கணக்கெடுப்பு மற்றும் வாழ்விடப் பாதுகாப்பு உள்ளிட்ட நீண்ட காலப் பாதுகாப்பு உத்திகள் உடனடியாகத் தேவை என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மீண்டும் கண்டுபிடிக்கப்பட்ட போதிலும், இந்தப் பாங்கா ஸ்லோ லோரிஸ் இப்போதும் அழிவின் விளிம்பிலேயே உள்ளது. சட்டவிரோத தகரச் சுரங்கப் பணிகள் (Tin mining) மற்றும் எண்ணெய் பனைத் தோட்டங்களுக்காகப் (Oil palm plantations) பெருமளவில் நிலங்கள் அழிக்கப்படுவதால், இவற்றின் இயற்கை வாழ்விடங்கள் வெகுவாகச் சுருங்கிவிட்டதாக அலோபி வனவிலங்கு மீட்பு மையத்தின் இயக்குநர் லங்கா சானி தெரிவித்துள்ளார். இதன் காரணமாக, பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்புச் சங்கத்தின் (IUCN) சிவப்புப் பட்டியலில் இது தற்போதும் 'மிகவும் ஆபத்தான நிலையில் உள்ள உயிரினமாக' (Critically endangered) வகைப்படுத்தப் பட்டுள்ளது.

■ இவை நாங்கள் சேகரித்து வெளியிட்ட தகவல்கள் மட்டுமே.

தேவனுக்கே மகிமை!

ஆசீர்வாதம் TV

24 மணி நேர தமிழ் கிறிஸ்தவ செயற்கைக்கோள் தொலைக்காட்சி (Satellite TV) பார்த்துப் பயனடையுங்கள்!

இப்பொழுது, நமது ஆசீர்வாதம் டிவி



சேனல் நம்பர்
1594

airtel digital TV



சேனல் நம்பர் **815**



SUN DIRECT

சேனல் நம்பர் **459**

அனைத்து கேபிள்களிலும் ஒளிபரப்பப்படுகிறது. தேவப்பிள்ளைகள் பார்த்துப் பயனடையுங்கள்! ஆசீர்வாதம் பெறுங்கள்!

For any Details Please Contact: 9994 73 9994

சென்னை ஆசீர்வாதத் திருச்சபை ஆராதனை நேரங்கள்!

ஞாயிறு ஆராதனைகள் :

காலை 7 மணி முதல் 9 மணி வரை

காலை 10 மணி முதல் 12 மணி வரை

புதன் கிழமை
Mid Week Service (சிறப்பு ஆராதனை)

மாலை 7 மணி முதல் 8.30 மணி வரை

தூய ஜார்ஜ் மேல்நிலைப்பள்ளி வளாகம்,
பச்சையப்பன் கல்லூரி எதிரில்,
பூந்தமல்லி நெடுஞ்சாலை,
கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.

ஞாயிறு ஆராதனை :

காலை 5 மணி முதல் 6 மணி வரை

வெள்ளிக்கிழமை
பெண்கள் கூட்டம்:

காலை 11 மணி முதல் 1 மணி வரை

Blessing Centre,
39, Manali High Road,
Manjampakkam,
Madhavaram,
Chennai - 600 060.

விருதுநகர் ஆசீர்வாதத் திருச்சபை ஆராதனை நேரம்!

காலை 10 மணி முதல் 12 மணி வரை

எழுப்புதல் ஜெப மையம், சூலக்கரை, விருதுநகர்.

மேலும் விபரங்களுக்கு : 93456789 83, 9994 07 9994